பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir


விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 04 | ஞாயிற்றுக்கிழமை 21.10.2018 | கதிர் 349

**இனி இது ரகசியம் அல்ல!**

வடக்கு மாகாண சபையின் கடைசி அமர்வு நாளை மறுதினம். அதற்கு அடுத்து இரண்டு நாள்களில் – 25ஆம் திகதி – அதாவது இன்னும் நான்கு நாள்களில் தற்போதைய சபை கலைந்து விடும். முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் எல்லோருக்கும் அவர்களது பக்கம் 02

# அடிப்படை அறிவு கூட இல்லாத தமிழ்த் தலைமைகளே எம்மிடம்

## முதலமைச்சர் விக்கி காட்டம்



யாழ்ப்பாணம், ஒக். 21

நெருக்குதல்களைக் கொடுக்காது தொடர்ந்து வரும் அரசுகளிடம் இருந்து அரசியல் தீர்வை எவ்வாறு பெறப் போகின்றோம் என்ற அடிப்படை அறிவுகூட இல்லாத தமிழ்த் தலைமைகளைத் தான் நாம் இன்று கொண்டுள்ளோம். கடைசியில் தீர்வு எதுவும் கிடைக்காது. பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள முதலீட்டாளர்களை வடக்குக்கு கொண்டு வருவதாகவே இது முடியும். பக்கம் 11

# அரசை எதிர்ப்பதற்கு வடக்கின் உதவியை நாடுகிறது ஜே.வி.பி.

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஒக்.21

நாட்டில் ஏற்பட்டுள்ள வரிச்சுமை, எரிபொருள் விலையேற்றம் போன்ற காரணிகளுக்கு எதிராகப் பாரிய போராட்டமொன்றை மேற்கொள்ளப்போவதாக தெரிவித்துள்ள ஜே.வி.பி. அதற்கு வட பகுதி மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவிக்கையில் –

புதிய அரசு மக்களுக்கு மானியத்தை பெற்றுக் கொடுப்பதாகவும், துன்பங்களை நீக்கு பக்கம் 11

# விக்கியை முதல்வராக்கியமை நான் செய்த பெரும் பாவமே!

## குமுறுகிறார் மாவை எம்.பி.



முல்லைத்தீவு, ஒக்ரோபர் 21

நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக்கியமை ஐந்து வருடங்களுக்கு முன்னர் நான் செய்த பாவம்.

- இவ்வாறு நேற்றுப் பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா. பக்கம் 02

# சுமந்திரனின் பிரேரணையை பார்த்தே கைதிகள் குறித்து ஜே.வி.பி. தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,ஒக். 21

அரசியல் கைதிகள் தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கொண்டுவரப்படவுள்ள ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பே அது தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க முடியும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. பக்கம் 02

# தமிழ்க் கட்சிகளின் பிளவுகளால் வடக்கு மாகாண சபை பறிபோகும்

## செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஒக். 21

நாங்கள் ஒற்றுமையாக இருப்பதன் மூலமே தென்னிலங்கை கட்சிகளுக்குச் சவாலாக இருக்க முடியும். இல்லையேல், ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றும் அபாயம் உள்ளது என்று ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் புதிய கட்சி தொடங்குவது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய பக்கம் 02

# இனப்பரம்பல் மாற்றம் தொடர்ந்ததாலேயே ஆயுதம் ஏந்தும் நிலைமை உருவாகியது

## முல்லைத்தீவில் சுமந்திரன் எம்.பி.



முல்லைத்தீவு, ஒக். 21

70 ஆண்டுகளுக்குத் தொடர்ந்த இனப் பரம்பல் மாற்றத்தை பேச்சு, ஒப்பந்தங்கள் மூலம் தடுக்க முடியாமல் போனதாலேயே இறுதியில் ஆயுதம் ஏந்திப் போராட வேண் டிய நிலை ஏற்பட்டது. இருப்பினும் அந்தப் போராட்டம் தோல்வியிலேயே முடிந்தது எனத் பக்கம் 11

# எம் இதயத்தில் இலங்கைக்கு என்றுமே சிறப்பான ஓரிடம்

## ரணிலிடம் கூறினார் மோடி

புதுடில்லி, ஒக். 21

எங்கள் இதயத்தில் இலங்கைக்கு என்றுமே ஒரு சிறப்பான இடம் இருக்கும் என்று கூறிப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்றார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்றுச் பக்கம் 11



# 'றோ' குற்றச்சாட்டுக்கு பின்னணியில் மஹிந்த?

## சந்தேகம் கிளப்பும் இந்திய ஊடகம்

புதுடில்லி, ஒக். 21

தன்னை கொல்வதற்கான சதி முயற்சியில் 'றோ' ஈடுபட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் என்ற வதந்தி பரவுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காரணமாக இருக்கலாம் என இலங்கை அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'எகனமிக் ரைம்ஸ்' பக்கம் 11

# ஒதியமலையில் நினைவுத் தூபி அமைக்கப் பொலிஸார் தடை

முல்லைத்தீவு, ஒதியமலைப்பகுதியில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 02 ஆம் திகதி 33 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் நினைவாகத் தூபி ஒன்று அமைக்கப் பிரதேச மக்கள் எடுத்த முயற்சிக்கு ஒட்டுசுட்டான் பொலிஸார் தடை போட்டுள்ளனர்.

ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட மக்கள் நினைவாக அந்த இடத்தில் நினைவுத்தூபி அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜாவின் பக்கம் 11

# படைத் தளபதி மீது போர்க்குற்றச்சாட்டு உறுதி மாலியிலிருந்து திருப்பி அனுப்புகின்றது ஐ.நா!

கொழும்பு, ஒக். 21

மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கை படைப்பிரிவின் கட்டளை அதிகாரி ஒரு போர்க்குற்றம்சாட்டப்படும் ஒருவர் என்றும், அவரை உடனடியாக நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், ஐ.நா பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்நாட்டுப் போரில், போர்க்குற்றங்களை இழைத்தார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டதை பக்கம் 11



# ஐ.நா. திருப்பி அனுப்பியுள்ள படை அதிகாரி குற்றமற்றவர்

## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 21

இலங்கை இராணுவத்தினர் எந்த சந்தர்ப்பத்திலும் மனித உரிமைகளை மீறவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து கூறியுள்ளார்.

மாலியில் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் அங்கம் வகிக்கும் இலங்கை இராணுவத்தினருக்குக் கட்டளை வழங்கும் அதிகாரியைத் பக்கம் 11

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய பதவி நிலைக்கு முன்னால் 'முன்னாள்' என்ற அடைமொழிவந்துவிடும். ஆனால் ஒருவர் மட்டும் விதிவிலக்காகப் பதவியில்நீடிப்பார். அவர் அவைத் தலைவர். சி.வீ.கே.சிவஞானம்.

இனி, மீளவும் வடக்கு மாகாண சபைக்குரிய தேர்தல்கள் நடத்தப்பட்டு, புதிய அவை தேர்தெடுக்கப்பட்டு, புதிய அவைத் தலைவர் தெரிவுசெய்யப்படும்வரை, பழைய அவைத் தலைவர் பதவியில் இருப்பார். சபை ஆளணித் தொகுதி அவரது நிர்வாகத்திலேயே இருக்கும்.

அவருக்குரிய வசதிகள், வாகனங்கள், பவிசுகள், வேதனம், அலவன்ஸ் எல்லாம் நீடிக்கும். ஆக, சபைக் கூட்டத்துக்குச் சமுகம் கொடுப்பதால் கிட்டும் மேலதிகப் பணம் மட்டும் சபைக் கூட்டம் நடைபெறாது என்பதனால் கிடைக்காது. அவ்வளவுதான்.

இப்படியான வசதியைத் தமிழர் ஒருவர் நீண்டகாலம் தொடர்ச்சியாக அனுபவித்துள்ளார். அவர் யார்தெரியுமா?

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஒரேயொரு அவைத் தலைவரான சாம்ராஜகாரியர்தான்அவர்.

முதலாவதும், கடைசியுமான வடக்கு, கிழக்கு மாகாணசபை 1988 நவம்பரில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

1990 முற்பகுதியில் இந்திய அமைதி காக்கும் படையினர் நாட்டைவிட்டுவெளியேறியபோது ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையிலான வடக்கு, கிழக்கு மாகாண சபையினரும் ஈழம் பிரகடனம் செய்து விட்டு நாட்டைவிட்டு இந்தியப் படையினருடன் வெளியேற வேண்டியவர்களானார்கள். அதனால் 1990 முற்பகுதியுடன் அந்த சபை செயலிழந்தது.

ஆனாலும், 2006 ஒக்ரோபரில் வடக்கு, கிழக்கு மாகாண சபை இரண்டு மாகாணங்களுக்கும் தனித்தனி சபையாகப் பிரிக்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை, முதலாவது வடக்குக்கிழக்கு மகாணசபையின் அவைத் தலைவராக இருந்த சாம் ராஜகாரியர் பதவியில் நீடித்தவராகக் கருதப்பட்டார்.

2006 இல் வடக்கு, கிழக்கு மாகாண சபை உத்தியோகபூர்வமாகப் பிரிக்கப்படும் வரை அச்சபைக்குத் தேர்தல் நடைபெறாத காரணத்தினால் புதிய அவைத் தலைவர் தெரிவு செய்யப்படவில்லை. அந்தக் காலம் வரை – அதாவது 1988 முதல் 2006 வரை – சுமார் 18 வருடங்கள் அவைத் தலைவர் பதவியைப் பெயருக்கு அலங்கரித்துக்கொண்டிருந்தார் சாம்ராஜகாரியர். இந்த 18 வருடங்களும் அவருக்குரிய மாத வேதனக் கொடுப்பனவு, அலவன்ஸ் எல்லாம் அவரது வங்கிக் கணக்குக்குத் தவறாது அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தனவாம்.

இப்போதைய நிலையில் வடக்கு மாகாண சபையின் தேர்தலும் விரைவில் நடைபெறும் அரசியல் சூழல் இல்லை.

அதனால் அவைத் தலைவர் சிவஞானம் காட்டில் மழைதான். அடுத்த மாகாண சபை தேர்தல் வரை அவைத் தலைவருக்குரிய சகல அந்தஸ்துகளும் அவருக்கு நீடிக்கும்.

அது அடுத்த இரண்டு, மூன்று வருடங்களுக்கு நீடித்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்னும் ஒரு கொசுறுத் தகவல்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டு இன்றுடன் சரியாகப் பதினேழு வருடங்கள். கூட்டமைப்பை உருவாக்கும் ஒப்பந்தத்தில் 2001 ஒக்ரோபர் 21ஆம் திகதி ஒப்பமிட்ட நால்வரில் இருவரே இன்றைக்கு கூட்டமைப்பில் உள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி ஆகியவை சார்பில் ஒப்பமிட்ட இரா.சம்பந்தன், ரெலோ முதல்வராக ஒப்பமிட்ட என். ஸ்ரீகாந்தா ஆகியோர் கூட்டமைப்பில் உள்ளனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் ஒப்பமிட்ட சுரேஷ் பிறேமச்சந்திரனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஒப்பமிட்ட அதன் அப்போதைய செயலாளர் குமரகுருபரனும் அவர்களது கட்சிகளும் இன்று கூட்டமைப்பில் இல்லை.

அடுத்தது – யாழ். மாநகர சபைக்கு ஈ.பி.டி.பி. சார்பில் வி.குகேந்திரன் (ஜெகன்) தெரிவு செய்யப்பட்டமையை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சியினர் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு எதிர்வரும் எட்டாம் திகதி வெளி வரவிருக்கின்றது. ஆனால் அதற்கு முன்னர் தமது பதவியைத் தாமே இராஜினாமாச் செய்கின்றார் என்ற கடிதத்தை ஜெகன் உரிய தரப்புகளுக்கு அனுப்பிவிட்டார் எனத் தெரிய வருகின்றது.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டிருக்கும் ஜெகன் யாழ். மாநகர சபைக்கு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படமுடியாது எனத் தெரிவித்தே தமிழரசுக் கட்சியினர் சார்பில் மேற்படி வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்த வழக்கு விசாரணை முடியும் வரை யாழ். மாநகர சபை உறுப்பினராக ஜெகன் செயற்படுவதற்கு மேன்முறையீட்டுநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்ததமை தெரிந்ததே.

- மின்னல்-

## சுமந்திரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இதனைக் கூறினார்.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதில் ஜே.வி.பி. உறுதியாகவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கொண்டு வரவுள்ள சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை தொடர்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் ரில்வின் சில்வாவிடம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அவர்–

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நாம் சரியான நிலைப்பாட்டையே எடுத்து வந்துள்ளோம். அந்த அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. வழக்குத் தாக்கல் செய்யப்படாதவர்களுக்கு விரைவாக வழக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கு அமைச்சுப் பதவிகளும், கட்சியின் தலைமைத்துவப் பதவிகளும் வழங்கப்பட முடியுமாயின் சிறிய குற்றங்களுக்காக அரசியல் கைதிகள் எவ்வாறு தடுத்து வைக்கப்பட முடியும்?

எனவே இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கான அழுத்தத்தை மக்கள் விடுதலை முன்னணி தொடர்ச்சியாக அரசுக்குக் கொடுக்கும்.

அரசியல் கைதிகள் தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பே எமது நிலைப்பாட்டை கூற முடியும்– என்றார்.

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களைப் பிரிக்கின்ற சந்தர்ப்பத்தை உருவாக்கக்கூடாது என்பது எமது கட்சியின் கருத்து. ஒற்றுமை தொடர்பாக முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடனும், முதலமைச்சருடனும் இது தொடர்பாகக் கதைத்திருக்கிறோம். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் இரண்டு மூன்று கட்சிகளாக பிரிகின்றபோது ஒரு பெரிய ஆபத்தை நாங்கள் சந்திக்க வேண்டும்.

போர்க் காலத்தில் கூட யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கால் பதித்திருந்தது. தற்போது உள்ளூராட்சி மன்ற தேர்தலில் பல இடங்களை ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியுமே கைப்பற்றின. தற்போது ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ரிஷாத் பதியுதீன் அமைச்சராக இருக்கின்றார், சுதந்திரக் கட்சி சார்பாக அங்கஜன் மற்றும் மஸ்தான் ஆகியோர் பிரதி அமைச்சர்களாக வடமாகாணத்தை பிரதிநிதிப்படுத்துகின்றனர்.

இந்நிலையில் எமது மக்கள் பிரிந்து வாக்களித்தால் மற்றும் எமது கட்சிகள் பிரிந்து இருக்கின்றபோது மக்கள் ஒரு முடிவை எடுக்கின்ற நிலைமை வரும். மக்கள் தங்களுக்கு ஆயிரம் தேவைகள் இருக்கின்றன? எனவே இத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இவர்களால் தான் முடியும் என்கின்ற சிந்தனைக்கு மாறுகின்ற வாய்ப்பு கூட இருக்கின்றது.

கொள்கையோடு இருக்கின்ற மக்கள் கூட வாக்களிக்கப் போகாத நிலைமை காணப்படுகின்றது. நாங்களும் கொள்கையைப் பேசிவிட்டு இருக்கின்றோம், இதனால் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து வடமாகாண சபையை கைப்பற்றுவதற்கான அபாயம் உள்ளது.

சரி, பிழை எப்போதும் இருக்கும். எனவே அதனைப் பேசித் தீர்க்கவேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என்பன ஆரம்பத்தில் அரசுக்கு எதிராகப் பேசி அடிவாங்கி, உதைவாங்கி, படுகொலை செய்யப்பட்ட வரலாறுகளும் உண்டு. அதற்காக நாங்கள் கொள்கையை விட்டுட்டு போனோம் என்று இல்லை.

முதலமைச்சர் புதிய கட்சி தொடங்கப்போகின்றார் என்று இதுவரை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அதனை அறிவிக்காதவரை நான் அதற்குக் கருத்து சொல்ல முடியாது. ஆனால் நாங்கள் ஒற்றுமையாக இருப்பதன்மூலமே தென்னிலங்கைக் கட்சிகளுக்கு சவாலாக இருக்க முடியும். இல்லையெனின் அவர்களுடைய நடைமுறைகளைப் பார்த்தால் பிரித்தாளும் தந்திரங்களைக் கையாளும் தென்னிலங்கை தன்னுடைய செயற்பாட்டை வடக்கிலே துரிதமாக மேற்கொள்ளும்.

கிழக்கிலே இதற்கான சந்தர்ப்பம் கூடுதலாகவே உள்ளது. அங்கே முதலமைச்சர் யார் என்ற பிரச்சினைகள் பல உள்ளன. எனவே தமிழ் சமூகம் மற்றும் தமிழ்க் கட்சிகள் பிரிந்து நிற்கின்ற நிலைமை ஏற்படுமேயானால். எமது கொள்கை, இலட்சியம் என்பன வீணாய் போகின்ற நிலையேற்படும்–என்றார். (ஐ)

## விக்கியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வழிகாட்டலில் இலங்கைதமிழரசுக் கட்சியின்திட்டமிடலில் இடம்பெறும் 'நிலஅதிகாரமும் அதிகாரப்பகிர்வும்' சிறப்புப் பேருரை நிகழ்வு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தலைமையில் நேற்று மாலை ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் பங்கேற்று சிறப்புரையாற்றும்போதே மாவை எம்.பி. இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழர்களின் பிரச்சினை தொடர்ந்துகொண்டே செல்கின்றது. நாங்கள் பேசிக்கொண்டு இருக்கின்றோம். நாங்கள் செய்த பாவத்தை நீதியரசர் விக்னேஸ்வரன் என்ற பெயரில் கடந்த ஐந்து ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விக்னேஸ்வரன் காரசாரமாகக் கண்டிக்கின்றார்.

இடைக்கால அறிக்கை பற்றி சுமந்திரன் எம்.பி. இங்கு சொன்னார். இடைக்கால அறிக்கை ஓர் அரசியல் தீர்வின் முழுமையான வடிவம் அல்ல. இந்த நாட்டில் இனப் பிரச்சினைத் தீர்வு உட்பட தேர்தல் முறை, ஜனாதிபதி முறை எல்லாம் உள்ளடக்கப்பட்டு ஓர் அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று அனைத்துக் கட்சிகளும் நாடாளுமன்றில் ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். அதன் பின்னர் அதற்கான குழுக்கள் நியமிக்கப்பட்டு எங்கள் சார்பில் சம்பந்தன் அதில் அங்கம் வகிக்கின்றார்.

எவ்வளவோ போராட்டங்களின் மத்தியில் இணக்கங்கள் காணப்பட்ட விடயங்களும் இன்னும் மேம்படுத்தப்படவேண்டிய விடயங்களும் இடைக்கால அறிக்கையில் காணப்பட்டன. அது முழுமையாக எங்களின் தீர்வைப் பிரதிநிதித்துவபடுத்துவது அல்ல.

இன்று ஒருமித்த நாடு என்பதுதான் அங்கு இருக்கும் விடயமாகும். 'ஏக்கியராஜ்ஜிய' என்பதற்குச் சமமான தமிழ் வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒஸ்லோ அறிக்கையில் சொல்லப்பட்ட விடயங்களை இன்று நாங்களும் பின்பற்றி வருகின்றோம்.

ஒருமித்த நாடு ஒரு சமஷ்டித் தன்மையைக் கொண்டது. இவ்வாறு ஒருமித்த நாட்டுக்குள் சட்டம் ஒழுங்கு, நில அதிகாரம், நிதி அதிகாரம் பகிரப்பட்டு அவை திரும்பப் பெறமுடியாதவாறு இருக்கவேண்டும். 13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் வந்த அதிகாரங்களைத் திருப்பப் பெறலாம். ஆனால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் அப்படி செய்யமுடியாது.

சிங்கள தேசத்தில் உள்ள ஏழு முதலமைச்சர்கள் சொன்னார்கள், அதிகாரங்களை முழுமையாகப் பகிருங்கள் என்று. அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் பயன்படுத்தத் தவறக்கூடாது.

கஜேந்திரகுமாரும் நீதியரசர் விக்னேஸ்வரனும் என்ன சொன்னார்கள்? இந்த இடைக்கால அறிக்கையை நிராகரியுங்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படக்கூடாது என்று பேரனும் சொன்னார். அடுத்த பேரனும் சொல்கிறார். இப்போது ஒரு நீதியரசரும் அதைத்தான் சொல்கிறார். அவர் இப்போது நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்புக்காகக் காத்திருக்கின்றார். அவர் பெரிய நீதியரசர் என்று சொல்கிறார்.

நாங்கள் இப்போது பொறுமையாக இருக்கின்றோம். சிறிது காலத்தில் அவர் பற்றிய விடயங்களையும் அரசியல் விடயங்களையும் ஒழுங்காகச் சொல்வோம். கொஞ்ச நாள் பொறுத்துக் கொள்ளுங்கள்.

இந்த ஆண்டுக்குள் அரசமைப்பு விடயம், நிலங்கள் விடுவிப்பது, கைதிகளின் விடுதலை – இவ்வாறு பல விடயங்களுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று நாங்கள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம்.

நிலம் எங்களுக்கு எவ்வளவு முக்கியமானது? நிலத்தை இழந்துவிட்டு தமிழீழக் குடியரசாக இருந்தாலும் எங்கே நாங்கள் ஆளப் போகின்றோம்? நிலம் வேண்டும். அந்த நிலத்தில்தான் எங்களுக்கு ஆளும் உரிமை இருக்கவேண்டும்.

நாங்கள் இதற்காக எதனையும் கேட்கவில்லை. மந்திரி பதவி என்றால் நாங்களும் அரை மந்திரி, குறை மந்திரி என்று பெறலாம். எதுவும் கேட்கவில்லை.

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும். மகாவலி போன்ற திட்டங்களை நாங்கள் நேரடியாக அரசுக்குச் சுட்டிக்காட்டினோ. அது இப்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அபகரிக்கப்பட்டுள்ள தனியார் நிலங்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று ஜனாதிபதி சொன்னார். அதற்காக நாங்கள் ஒப்பதந்தம் செய்யவில்லை. அவை உடன்பாட்டுடன் செய்யப்படும் விடயங்கள்.

இந்த அரசும் எங்கள் பிரச்சினைக்குத் தீர்வு தரவில்லை என்றால் அடுத்த கட்டம் என்ன? அதுபற்றி யாராவது கதைக்கின்றார்களா? ஆக சம்பந்தனை பற்றி, சுமந்திரனை பற்றி, என்னைப் பற்றி குறை கூறுகிறார்கள். எங்கள் தலைமையை மாற்ற வேண்டும். அவர்களுக்கு அதுதான் முக்கியம்.

எங்கள் தலைமையை மாற்ற வேண்டும், ஒரு புதிய தலைமையைக் கொண்டுவரவேண்டும் என்று ஆளாளுக்கு அடிபட்டுத் திரிகின்றார்கள். அதுவல்ல இப்போது எங்களின் பிரச்சினை.

இந்த அரசும் எங்களை ஏமாற்றுமாக இருந்தால் இந்த ஆண்டின் இறுதியில் சில முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டி வரும்.


இந்த அரசு பிழைத்தால் அடுத்தது என்ன செய்யலாம் என்பதை நாங்கள் மனச் சோர்வு அடையாமல் தைரியத்துடன் சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடி தீர்மானிக்கவேண்டும் – என்றார்.

(ஐ)

# இன்றைய தமிழ் தலைமைகளுக்கு அடிப்படை அறிவு கூட கிடையாது!

## முதல்வர் விக்கி காட்டம்

**தமிழ்த்தேசியபசுமைஇயக்கத்தின்ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்ட 'சூழல் அரசியலும் நில அபகரிப்பும் - 'பச்சை முகம்' உரை அரங்கில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆற்றிய ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:-**



தலைப்பில்லாமல் பேசக்கூடாது
குறிக்கோள் இல்லாமல் வாழக்கூடாது என எமது முன்னோர்கள் குறிப்பிடுவர்.

இந்த நிகழ்வில் எனக்கு தலைப்புக்கள் எதுவும் தராமல் பிரதம விருந்தினர் முடிசூட்டி எனது உரை மகுட உரையாக அமையும் எனத் தெரிவித்திருக்கின்றார்கள். உங்கள் ஒவ்வொருவருடைய பேச்சுக்களில் இருந்தும் ஒவ்வொரு பகுதிகளை கிள்ளி எடுத்து எனது உரையை அமைக்கலாம் என்றால் நான் முற்கூட்டியே எனது உரைகளைத்தயாரித்துக் கணினியில் அச்சேற்றம் செய்த பின்பே அவற்றை ஆற்றுகின்ற வழக்கத்தைக் கொண்டிருப்பதால் அந்த வழி செல்ல முடியாதிருக்கின்றது. எனினும் உங்கள் ஒவ்வொருவரினதும் தலைப்புக்களை மையமாக வைத்து அவற்றைப் பற்றிய என் சிந்தனைகளை வெளியிட்டெனது உரையை முன்னெடுத்துச் செல்லலாம் என்று நினைக்கின்றேன்.

சூழல் அரசியல் அல்லது Environmental Politics என்ற சொற்பதம் மனிதனுக்கும் சூழலுக்கும் இடையில் இருக்கும் உறவை வலியுறுத்துகின்றது. அதே நேரம் சூழல் அரசியலுக்கு என உலக ரீதியாக கொள்கைகளும் அரசியல் இயக்கங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. ஆகவே சூழல் அரசியல் என்ற சொற்றொடர்மிகத் தெளிவான கருத்துக்களையும் கொள்கைகளையும் உள்ளடக்கியதான உலகநாடுகள் அனைத்தினதும் அங்கீகாரங்களைப் பெற்றுக்கொண்டதுமான ஓர் அரசியல் கோட்பாடாகும். அதாவது சூழலைப் பாதுகாப்பதற்கான அரசியலாக இந்த அரசியல் கொள்கை வெளிப்படுத்தப்படலாம். அத்துடன் சூழலுக்கு பாதிப்புக்கள் ஏற்படுத்தக்கூடிய காரணிகளை இனம்கண்டு அவற்றைக் களைவதும் சூழலை மேம்படச் செய்வதற்கான திட்டங்களை வகுப்பதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் சூழல் அரசியல் என்ற சொற்பதத்தினுள் அடங்கும்.

ஆனால் இலங்கையில் சூழல் அரசியலானது சூழும் அரக்கனாகப் பரிணாமம் பெற்றுள்ளது. சூழலின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி இன அழிப்புக்கு இடமளிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் சிங்கள அரசுகளினால் முன்னெடுக்கப்பட்டுவந்த இன அழிப்பு அல்லது இனச் சுத்திகரிப்புப் பற்றி உலக நாடுகள் பலவும் அறிந்திருக்கின்றன. ஆனால் தற்போது எதுவித ஆரவாரங்களுமின்றி துப்பாக்கி முழக்கங்கள் இன்றி, இரத்தம் சிந்தாமல், பச்சை யுத்தம் என்ற பெயரால் எமது தமிழ்ப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன. அதற்கு சூழல் அரசியல் என்ற மாயைச் சொல்லை பயன்படுத்தி உலக நாடுகளை நம்பச்செய்கின்ற கனகச்சிதமான செயற்பாடுகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சூழல் அரசியல் என்ற பெயரில் முன்னெடுக்கப்படுகின்ற பச்சை யுத்தங்கள் பல. அவற்றுக்கே சூழல் அரசியலும் நில அபகரிப்பும், என்று தலையங்கம் கொடுத்துள்ளோம். வனங்களும் நில அபகரிப்பும், தொல்லியலும் நில அபகரிப்பும், மகாவலியும் நில அபகரிப்பும், சட்டங்களும் நில அபகரிப்பும் எனப் பல வழிகளினூடும் நில அபகரிப்புக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு வருகின்றன. வனங்கள், தொல்லியல், மகாவலி விரிவாக்கம், சட்டம் என்ற பல்வேறு காரணிகளுக்கூடாக எமது நிலங்கள் சத்தம் சந்தடி இல்லாமல் ஒவ்வொரு பகுதிகளிலும் சிறு சிறு பிரிவுகளாக சூறையாடப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் காணப்படுகின்ற மொத்த நிலப்பரப்பின் 23 சதவிகிதம் வனப்பகுதிகளாக பராமரிக்கப்பட வேண்டும் என்பது சட்டம். இந்த சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இலங்கையில் காணப்படும் மொத்த நிலப்பரப்புகளின் பெரும்பகுதியான வனப் பகுதிகளை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளிலேயே அமைக்கப் பார்க்கின்றது அரசாங்கம். மற்றைய மாகாணங்களில் வனப் பகுதிகளைக் குறைத்து வடக்கு கிழக்கில் ஈடுகட்டப் பார்க்கின்றது. வட கிழக்கில் இவ்வளவு வனப் பகுதி இருக்க வேண்டும் என்று சட்டம் எதுவும் இல்லை. ஆனால் இவ்வனதிணைக்களம் என்ற அமைப்பினூடாக வனங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்ற போர்வையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இப்பகுதிகளில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையைத் தொடர்ந்து மக்கள் வாழ்விடங்கள் வனங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. தமது பூர்வீக வாழ்விடங்களை விட்டுவெளியேறிய மக்களின் நிலங்களில் காடுகள் உருவாகியிருந்தன. அவற்றை அரசாங்கம் கையேற்று சர்வதேச அளவுப் பிரமாணங்களை மீறியவையாக மரங்கள் வளர்ச்சியடைந்துள்ளதாக மக்கள் வாழ்விடங்களில் இருந்த மரங்களை அடையாளப்படுத்தி வருகின்றார்கள். ஒரு இடத்தில் காணப்படும் அடர்ந்த காடுகளில் உள்ள மரங்கள்சர்வதேச அளவுப்பிரமாணங்களுக்கு மேற்பட்டிருப்பின் அது வனம் அதாவது Forest-என்ற சொற் பதத்தில் அடங்குவன. ஏனையசிறிய மரங்களைக்கொண்டபற்றைக் காடுகள் shrub என அழைக்கப்படுவன. இந்த நியமங்களுக்கு அமைவாக வன்னிப் பகுதியில் வாழ்ந்த எம் மக்களின் நிலங்களில் பெரும்பகுதி வனத் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டு அரச காணிகளாக மாற்றப்பட்டு வன இலாகாவின் மேற்பார்வையின் கீழுள்ள நிலங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

சிங்கள அரசியல் தலைமைகள் வடகிழக்கைத் தம் வசம்படுத்தும் பல திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். அதே சந்தர்ப்பத்தில் இதற்குச் சமாந்தரமாகச் சந்தடி எதுவு மின்றி அந்த அரசியல் முன்னெடுப்புக்களை நிறை வேற்றுகின்ற குழுக்களாக வேறு குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் ஜனாதிபதியாக வீற்றிருந்த காலத்தில் உள்நாட்டு யுத்தம் வலுப்பெற்று எல்லைப்புறக் கிராமங்களில் இனங்களுக்கிடையே யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஜனாதிபதி அவர்களின் மகனான ரவி ஜெயவர்த்தன அவர்கள் இந்த நிறைவேற்றுக் குழுவொன்றிற்குத் தலைமை தாங்கினார். வவுனியாவிற்கு அப்பால் உள்ள பம்மைமடு, ஈரற்பெரிய குளம் போன்ற பகுதிகளில் தென் பகுதியில் இருந்து சிங்கள மக்களை கொண்டுவந்து குடியேற்றியது மட்டுமன்றி அவர்களுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சி மற்றும் இன்னோரன்ன இராணுவப் பயிற்சிகளை வழங்கி அவர்களை அங்கு குடியேற்றினார்.

ரவி ஜெயவர்த்தன அவர்கள் அரசியல் மேடைகளில் காட்சியளிக்காத போதும் இந்த நிறைவேற்று கடமைகளை திறம்பட ஆற்றினார். எனக்கு சிரேஷ்டராக என் கல்லூரியில் கற்ற அவர் 'ரைஃபிள் க்ளப்' என்ற எமது சங்கம் ஒன்றில் சேர்ந்து சூட்டுப் பயிற்சி பெற்று மாணவனாக இருந்த காலத்தில் துப்பாக்கி சுடுவதில் பத்துக்குப் பத்து என்ற கணக்கில் இலக்குகளை சுட்டு வீழ்த்தக் கூடியவராக இருந்தார்.

இவ்வாறு சிங்கள மக்கள் தமது இனத்தைக் காப்பதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்ட போது எமது அரசியல் தலைவர்கள் மேடைப் பேச்சாளர்களாக மேடைகளில் வீர முழக்கங்களை முழங்கிவிட்டு வீட்டிற்குச் சென்று நித்திரையில் ஆழ்ந்து தான் எமது சரித்திரம். சுற்றி என்ன நடக்கின்றது என்பதை அறியாத அப்பாவிகளாக இருந்தார்கள். இன்றும் இருந்து வருகின்றார்கள்.

அதே போல் தொல்லியல் திணைக்களம் நீண்ட காலமாக இலங்கையில் இயங்கிவருகின்ற போதும் அவ்வாறான ஒரு திணைக்களம் இயங்குவது பற்றி பொதுமக்கள் அறிந்திருக்கக்கூட வாய்ப்பில்லாத நிலையிலேயே அதன் செயற்பாடுகள் அமைந்திருந்தன. ஆனால் இன்று தொல்லியல் திணைக்களம் வடகிழக்குப் பகுதிகளில் ஆட்சி செலுத்துகின்ற ஒரு திணைக்களமாக மாறியுள்ளது. அங்குள்ள கல்வெட்டுக்கள், அடையாளங்கள், தொல்லியல் சாதனங்கள் ஆகியவற்றைத் தாங்கிய இடங்கள் அனைத்தையும் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழுள்ள நிலங்களாக மாற்றிவருகிறது. அரசின் கபட நோக்கங்களை நிறைவேற்றுகின்ற ஒரு திணைக்களமாக தொல்பொருளியல் திணைக்களம் இயங்கி வருகின்றது என்றே கூறவேண்டும்.

உதாரணமாக திருக்கேதீச்சரம் பகுதியில் கோவிலுக்கு சொந்தமான நிலத்தில் தென்னை மரங்கள் நாட்டப்பட்டு அவைகள் காய்த்துக் குலுங்குகின்ற இவ் வேளையில் அந்த மரங்களுக்குத் தேவையான உரக்கலவைகளை இட நிலத்தை கொத்தி செப்பனிடுவதற்கு தொல்பொருளியல் திணைக்களம் தடை விதித்திருக்கின்றது. காரணம் கேட்டால் தொல்பொருள் தடயங்கள் காணப்படக்கூடிய பகுதியாகையால் அப்பகுதிகளில் நிலத்தை அகழ்வதற்கோ அல்லது மண்வெட்டி கொண்டு கொத்துவதற்கோ அனுமதி இல்லை என கூறப்படுகின்றது. ஆனால் அதே பகுதியில் நிலத்தைக் கொத்தாமல், அடையாளங்களை சிதைக்காமல், கிறீஸ்தவர்களும் பௌத்தர்களும் எவ்வாறு குடியேறினார்கள் என்பது புரியாப்புதிராக இருக்கின்றது. நான் இங்கு மதம் சார்ந்து குதர்க்கமாகப் பேசுகின்றேன் என யாரும் குறை விளங்க வேண்டாம். உண்மை நிலையை எடுத்துச் சொன்னேன். அவ்வளவு தான். வேண்டுமானால் போய்ப் பார்த்து உண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

மகாவலி நீரைத் திசை திருப்பி வரண்ட பிரதேசங்களுக்கு அதன் நீரை வழங்குகின்ற திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அப்போதைய அமைச்சர் காமினி திசாநாயக்க அவர்களின் காலத்தில் விசேட ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டது. அதாவது மகாவலி ஓடுகின்ற பிரதேசத்தை அண்மித்த பகுதிகளில் உள்ள நிலங்கள் பொறுப்பேற்கப்பட்டு இனங்களுக்கிடையேயான விகிதாசார அடிப்படையில் அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. ஆனாலும் வடகிழக்கிற்கு தெற்குப் பகுதிகளில் இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளில் சிங்கள மக்களே குடியேற்றப்பட்டமையால் அங்கு தமிழ் மக்களுக்கோ அல்லது தமிழ் பேசுகின்ற முஸ்லீம் மக்களுக்கோ காணிகள் கிடைக்கப் பெறவில்லை. இந்த நிலையில் அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வந்தார். அதாவது வடக்குக் கிழக்கு பகுதிகளில் இவ்வாறான காணிகள் வழங்கப்படும்போது பழைய விகிதாசாரத்தையும் கணக்கில் எடுத்து அதற்கு ஏற்ப அப்பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் பேசுகின்ற மக்களுக்கும் காணிகளை வழங்கியே இந்த விகிதாசாரக் கொள்கைகள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும் என்று. ஆனால் நடைபெற்றதோ மகாவலி நீர் வரப்போகின்றது என்று பூச்சாண்டி காட்டி பெரியளவிலான நிலப்பரப்புக்கள் எமது மாகாணத்தில் கையகப்படுத்தப்பட்டன. மகாவலி நீரும் வரவில்லை, நிலங்களும் பகிரப்படவில்லை. அனைத் ணதும் அரசுடமை ஆக்கப்பட்டுவிட்டது. அங்கு சிங்களக்குடியேற்றங்கள் இன்று நடைபெற்று வருகின்றன.

## அரசுக்கு வக்காளத்து வாகும் போக்கால் வெட்கித் தலை குனியும் நிலைமை என விசனம்

அடுத்து நில அபகரிப்புக்கான பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. புதிய புதிய சட்டங்களை உருவாக்கி அந்தச் சட்டங்களின் கீழ் எமது மக்களின் பூர்வீக குடியிருப்புக் காணிகள் அரசுடமைகளாக்கப்பட்டு வருகின்றன. எமது மக்களை அவர்களின் இருப்பிடங்களில் இருந்து அகற்றுவதும் அவர்கள் நிலங்களில் பயிர்செய்கைகள் மேற்கொள்ள முடியாமல் தடுப்பதும் என பலவித வழிகளில் இந்தப் பச்சை யுத்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவை பற்றி எதுவும் அலட்டிக் கொள்ளாமல் எமது அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் ஆட்சியாளர்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவுகளை நல்குவதும் தமிழ் மக்களின் ஏகோபித்த குரல்களுக்கு எதிராக அரசுக்கு வக்காளத்து வாங்குவதுமான நிகழ்வுகள் எம்மை வெட்கித்தலைகுனிய வைக்கின்றது. ஓர் இனத்தையே இல்லாமல் அழிப்பதும் அவர்களின் இருப்பிடங்களை இல்லாமல் செய்வதுக்குமான செயல்களுக்கு எம்முடைய தலைமைகள் துணை போகின்றார்கள்.

அண்மையில் 48 பேர் கொண்ட ஒரு செயலணி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டது. 48 பேர் கொண்ட அச் செயலணி வட,கிழக்குப் பொருளாதார மேம்பாட்டை கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டது. அதில் மத்திய அமைச்சர்கள் 13 பேர், அவர்களின் செயலாளர்கள், இராணுவ, கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றின் படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், இரு மாகாண ஆளுநர்களுடன் என்னையும் என் வடமாகாண பிரதம செயலாளரையும் உள்ளடக்கிருந்தார் ஜனாதிபதி. வடமாகாணத்தைப் பிரதிபலிக்கும் மக்கள் பிரதிநிதி நான் ஒருவனாகவே இருந்தேன். அவ்வளவு மதிப்பு என்மேல் ஜனாதிபதிக்கு! நான் அவருக்குக் கூறினேன். வடகிழக்குப் பொருளாதாரத்தைக் கவனிக்க தெற்கத்தையர்கள் தான் பெரும்பான்மையாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இதுவரை காலமும் இல்லாமல் அடுத்த வரும் ஜெனீவாவில் பொறுப்புக் கூறும் நேரத்தில் இதை செய்துள்ளீர்கள். எனது பதவிக்காலம் விரைவில் முடியவிருக்கின்றது.

(11ஆம் பக்கம் பார்க்க)

நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அங்கு கதாநாயகன்; இங்கு வில்லன்

முழு நேர இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய பின்னர் அதிலிருந்து ஓய்வு பெற்று, அதன் பின்னரும் பாதுகாப்புச் செயலாளராகப் படைத்தரப்புடன் இணைந்து போரியல் நடவடிக்கைகளில் மும்முரமாகவிருந்த கோட்டாபய இப்போது முழு நேர அரசியலுக்குத் தயாராகிவிட்டார்.

யதார்த்தத்தை மறைத்து, உண்மைகளைப் புதைத்து, அவற்றுக்கு மாற்றானவற்றை அவர் பேசும் விதம் அவர் அரசியலுக்கு வரத் தயாராகி விட்டார் என்பதை உறுதியாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

*“சிறுபான்மையினர் என்னை விரும்பாமல் இருப்பதற்குக் காரணம் இருக்காது. நாங்கள் சிறுபான்மையினத்தவர்களுடன் யுத்தத்தைச் செய்யவில்லை. பயங்கரவாதிகளுடனேயே யுத்தத்தைச் செய்தோம். சிறுபான்மையினத்தவர்களை அந்தப் பயங்கரவாதிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காவே யுத்தம் செய்தோம்”* – என்று அவர் அளித்திருக்கும் விளக்கம் அரசியல்வாதிகளுக்கே மட்டும் உரியதான, வாய்மையைப் புதைத்து, பொய்மைகளை உரைக்கும் சிறப்புப் பண்பியல்புகளுக்கு உரியதான கூற்றாகும்.

சிறுபான்மையினர் என்று அவர் குறிப்பிடுகின்றவர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்களும் முஸ்லிம்களுமாவர். இதில் முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவரை அந்த மக்களில் ஒரு சாரார் எதிர்க்கவும், அதற்கு மாறாக இன்னொரு சாரார் மாறி ஆதரிக்கவும் அவர்களுக்குக் காரணங்கள் இருக்கலாம். ஆனால், வடக்குக் கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை அவரை வரவேற்றல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதுதான் அவர்களின் ஒருமித்த நிலைப்பாடு.

யுத்த காலத்திலும், பின்னரும், பொதுமக்களின் ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல் இந்தப் போரை வெற்றி கண்டோம் என முழுப் பூசணிக்காயையே சோற்றுக்குள் மறைத்தவர் மாதிரி தம்மைத் தாமே புளுகிப் புளகாங்கிதம் அடைந்தவர் அவர். இந்த யுத்தத்தில் சிவிலியன் உயிரிழப்புப் பூச்சியம் என்றும் அண்டப்புளுகை நீண்ட காலம் அவிழ்த்து விட்டவர்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் முறியடிக்கப்பட்ட தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் பல பத்தாயிரம் பொதுமக்களைக் கொன்றொழித்து, பல்லாயிரம் பொதுமக்களைக் காயப்படுத்தி, தமிழர்களின் தலைமுறை தலைமுறையான தேட்டங்களை அழித்துச் சூறையாடிய வரலாற்று அராஜகத்தின் பிரதான சூத்திரதாரி – பிதாமகர் – அவர்தான்.

இப்போது சாத்தான் வேதம் ஓதுவது போல மக்கள் முன்வந்து நின்று கொண்டு பயங்கரவாதிகளைத்தான் அழித்தேன், தமிழர்களை அல்ல என்று கதை அவிழ்த்து விடுகின்றார்.

இலங்கைத் தீவில் துருவமயப்பட்டு நிற்கும் தமிழ்த் தேசியத்தினதும், சிங்களத் தேசியத்தினதும் முரண்பாட்டுச் சிக்கலின் நடுவே, பௌத்த – சிங்கள மேலாதிக்கக் குறியீடாகவும், அதன் செயற்பாட்டுத் தளத்தில் உச்சத்தில் நின்று கட்டளையிடும் தளபதியாகவும் இயங்கி, தமிழர் தேசத்தின் பேரழிவுக்குப் பிரதான காரணகர்த்தாவாக அமைந்தவரும் கோட்டபயதான்.

இந்தப் பேரழிவுகளுக்குப் பின்னர் 2010, 2015 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில், இந்த மனிதருக்கு எதிரான தங்களின் சீற்றத்தையே – எரிச்சலையே – கோபத்தையே– அவரது சகோதரர் மீது காட்டி, அவருக்கு எதிராகவே தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வாக்களித்தனர்.

இந்த மனிதர் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத்தில், அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராகப் படைத்தரப்பினர் இழைத்த ஒரு குற்றம் குறித்துக் கூட, ஒரு மனித உரிமை மீறல் குறித்துக் கூட, எந்த விசாரணையுமே நடைபெறவேயில்லை என்பதைத் தமிழ் மக்கள் அறியாமல் இல்லை; அல்லது மறந்து விடவில்லை.

‘பயங்கரவாதிகளுக்கு எதிரானது’ என்ற பெயரில் தாம் முன்னெடுத்த போராட்டத்தை முழுத் தமிழினத்துக்குமே எதிராகத் திருப்பி, இலங்கைத் தீவில் தமிழர்களின் வரலாற் றில் மிகப் பெரிய போரழிவைச் செய்த ’கதாநாயகன்’ என்ற சரித்திரப் பட்டத்தை பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் மத்தியில் பூண்டு நிற்கும் அவர், மானமுள்ள தமிழர்கள் மத்தியில் என்றும் ஒரு குரூர, கொடூர ’வில்லனாகவே’ நோக்கப்படுவார்.

இரத்த வெறி இராணுவத் தலைமைப் போக்கால் பேரழிவுகளையும், போரழிவுகளையும் சந்தித்த தமிழினம் இந்த வரலாற்று வில்லன்களை இலகுவில் மறந்து விடவும் மாட்டாது; மன்னித்து விடவும் மாட்டாது.

இலங்கைத் தீவில் தமிழருக்கு எதிரான சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தினது ஒடுக்குமுறையானது கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், விவசாயம் என்ற துறைகளில் ஆரம்பித்து, தமிழர் தாயகத்தைப் பிளந்து சூறையாடல் என்ற பன்முகப்பட்ட கோலத்தில் விரிவாக்கமடைந்து வந்த காலத்தில், இராணுவ ரீதியாகவும் – படைத்தரப்பு மூலமாகவும் – தமிழர்களைக் கொன்றொழித்து, அவர்களின் தனித்துவத்தையும், தாயகத்தையும், இருப்பையும் சூறையாடிச் சின்னாபின்னமாக்கும் கொடூர இராணுவத் தந்திரோபாயத்தை கட்டவிழ்த்த தென்னிலங்கை மூளையத்தில் கோட்டபயவுக்கு முக்கிய இடமுண்டு என்பதைத் தமிழர்கள் இலகுவில் மறந்து விடமாட்டார்கள்.

தமிழரின் தேசம் மீதான சிங்கள அரச ஒடுக்குமுறையின் குரூரப் பரிமாணத்தின் புதிய வடிவத்தை வழிகாட்டி வனைந்த சிங்களச் சிற்பி இவரே என்பது ஈழத் தமிழர்களின் அடிமனதில் என்றும் ரணமாக – நிலையாக – பதிந்து கிடக்கும்.

# வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்



வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் தென்மராட்சியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குகின்ற நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.

சாவகச்சேரி கால்நடை சுகாதார வைத்திய பணிமனையில் கால்நடை வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் சார்பில் அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ஞா.கிஷோர், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திருமதி சிவமங்கை இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான பொருள்களை வழங்கினர்.

கோழி வளர்ப்பிற்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கோழிக்கூடு மற்றும் கோழிக் குச்சுகளும் கால்நடை வளர்ப்பிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பசு மாடுகள் மற்றும் ஆடுகள் என்பனவும் இதன்போது வழங்கப்பட்டன. (ஐ–7)

# பொன்னாலை வீதிப் புனரமைப்பு வேலையை பொதுமக்கள் கண்காணிக்க வேண்டிய நிலை



யாழ்ப்பாணம், ஒக். 21

வீதி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான பொன்னாலை – மூளாய் வீதி சீரான முறையில் புனரமைக்கப்படவில்லை எனப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தில் உரியவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வீதிப் புனரமைப்பு கடந்த ஓகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. அப்போது பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகியமையால் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை தொடக்கம் சின்னக்குளம் வரை 30 மீற்றர் வரையான வீதி அப்போது புனரமைக்கப்பட்டது.

இதன்போது ஏற்கனவே இருந்த வீதியைக் கிளறாமல் அதற்கு மேல் 4 இஞ்சி கல் அடுக்கப்பட்டு வேலைகள் இடம்பெற்றன. இதன்போது அங்கு சென்ற பிரதேச இளைஞர்கள் வீதியைக் கிளறாமல் புனரமைத்தால் விரைவில் பழுதடைந்துவிடும் என்பதால் கிளறிப் புனரமைக்குமாறு கூறினர்.

ஆனால், அதைக் கருத்தில் எடுக்காமல் அவர்கள் புனரமைக்க முற்பட்டபோது பிரதேச இளைஞர்கள் அதற்கு எதிர்ப்புக் காட்டினர். அவர்களுக்கு எதிராகப் பொலிஸில் முறையிடப்போவதாக ஒப்பந்தகாரர் தரப்பு அச்சுறுத்தியது. இளைஞர்கள் அதற்கு அஞ்சாமல் நின்றமையால் வீதியில் முன்னர் அடுக்கப்பட்ட கற்கள் அப்புறப்படுத்தப்பட்டு வீதி கிளறப்பட்டு வேலைகள் தொடங்கப்பட்டன.

மேலும், சீரான முறையில் தார் ஊற்றப்படாமையால் இளைஞர்கள் களத்தில் நின்று வேலையைக் கண்காணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தொழில்நுட்ப உத்தியோகத்தர் பெயருக்கு மட்டுமே அங்கு நின்றார் எனவும் அவர் வேலைகளைக் கண்காணிக்கவில்லை எனவும் இளைஞர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்நிலையில், மிகுதி வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்று முன் தினம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்கு முன்பாக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன்போது சீரான முறையில் தார் ஊற்றப்படாத நிலை இளைஞர்களால் அவதானிக்கப்பட்டு வேலையாட்களுக்கு கூறப்பட்டது.


மிகுதி வீதி புனரமைக்கவேண்டிய நிலையில், தாங்கள் தொடர்ந்தும் களத்தில் நின்ற கண்காணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை தொடர்பாக இளைஞர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வேலைகள் நேர்த்தியாக நடைபெறுவதை வீதி அபிவிருத்தித் திணைக்களம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வீதி வேலைகளைப் பொறுப்பெடுக்கும் ஒப்பந்தகாரர்கள் அவற்றைச் சீரான முறையில் புனரமைக்காமல் பணத்தைச் சூறையாடிச் செல்லும் சம்பவங்களால் வீதிகள் சில வருடங்களிலேயே சேதமடைகின்றன என மக்களால் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஒப்பந்தகாரர்களிடம் வேலைகளை பொறுப்பளிக்கும் திணைக்களங்களும் சபைகளும் தமது தொழில்நுட்ப உத்தியோகத்தரை களத்திற்கு அனுப்பி உரியவாறு கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வவுனியாவில் ஏழைக் குடும்பத்துக்கு செல்வம் எம்.பியால் தற்காலிக வீடு



வவுனியா, ஒக். 21

வவுனியா ஆச்சிபுரத்தில் வசித்து வரும் ஏழைக் குடும்பத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனால் நேற்று வீடு கையளிக்கப்பட்டது.

முன்னர் வசித்து வந்த மண்ணினால் கட்டப்பட்ட வீடு மழைக்கு இடிந்து விழும் நிலையில் காணப்பட்டமையால் அம்மா அறக்கட்டளை மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஜேர்மன் மகளீர் அமைப்பினரின் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியில் இந்தத் தற்காலிக வீடு அமைக்கப்பட்டது.

இந்த வீட்டினை பயனாளிக்குக் கையளிக்கும் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோதரலிங்கம், வவுனியா தெற்கு பிரதேசசபையின் தலைவர் து. நடராஜசிங்கம் , வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் மற்றும் தமிழ் ஈழ விடுதலைஇயக்கத்தின் உறுப்பினர்கள், அம்மா அறக்கட்டளையின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## நாளை

22.10.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம்: பூராட்டாதி மு.ப. 8.09 வரை
திதி : திரயோதசி. மு.இ. 10.20 வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம் : 7. 32 – 9.02 வரை

# எல்லா விடயங்களிலும் முல்லைத்தீவை சுரண்டும் தன்மை தொடர்ந்து வருகிறது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆதங்கம்



முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் இழப்புக்களும் நில அபகரிப்புக்களும் நடக்கின்றன. எல்லாவிடயங்களிலும்முல்லைத்தீவைச் சுரண்டும் தன்மையும் காணப்படுகின்றது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நல்லிணக்கத்திற்கான உறவுப் பயணம் நிகழ்ச்சி நேற்று முன்தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வேணாவில் பகுதியில் நடைபெற்றுள்ளது.

2025 செல்வந்த நாடு என்ற எண்ணக் கருவை வெற்றிகொள்வதற்கான இனங்களுக்கிடையில் சமாதானம்,சகவாழ்வு, நிலைத்து நிற்கக்கூடிய அமைதியான சன சமூகம் ஒன்றைக் கட்டி எழுப்பும் நோக்கிலும் தேசிய நல்லிணக்கத்தைக்கட்டிஎழுப்பும்நோக்கிலும் அம்பாந்தோட்டையைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இவர்களைவரவேற்கும்நிகழ்வு புதுக்குடியிருப்பு வேணாவில் வண்ணன் இளைஞர் கழகத்தினால் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்துகொண்டார். அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

அம்பாந்தோட்டை அரசியல் சார்ந்த ஒரு பெரிய மாவட்டம். முல்லைத்தீவுஎன்பதுபோரினால் தளம் அமைத்துப் போரைக் கண்டு பல இழப்புக்களைக் கொண்ட மாவட்டம்.

இந்த உறவுப்பாலம் நல்ல ஒரு விடயமாகவே நான் பார்க்கின்றேன். அம்பாந்தோட்டையைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இங்கு இருக்கின்ற நாள்களில் உங்கள் மனக் கிடைக்கைகளை– சோகத்தை யாரையும் திட்டாது எடுத்துச் சொல்லுங்கள்.

எங்கள் இனத்திற்காக நாங்கள் செய்ததியாகங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில்தான் இழப்புக்களும் நில அபகரிப்புக்களும் எல்லா விடயங்களிலும் சுரண்டும் தன்மைகளும் காணப்படுகின்றன என்று அவர்களிடம் நீங்கள் கூறுங்கள்.

அம்பாந்தோட்டையில் இருந்து வந்துள்ள இளைஞர்கள் தங்களுடைய குடும்பங்களில் நண்பர்களுக்கு உங்கள் சோகத்தைப் பகிர்கின்ற வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்தவேண்டும்.

இளைஞர்களின் ஊடாக தமிழர்களின் பிரச்சனைகளைக் கொண்டு சொல்வதன் மூலம் மனமாற்றத்தை தென்னிலங்கையில் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

இங்குள்ள தமிழ் மக்களின் மன ஆதங்கங்களைத் தெற்கிற்குக் கொண்டு செல்வதன் ஊடாக எங்களின் உறவுப்பாலத்தை பலப்படுத்தவேண்டும்–என்றார்.

புதுக்குடியிருப்பு இளைஞர் சேவை அதிகாரி விஜிதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம்உட்பட பலர் பங்கேற்றனர்.(ஐ)

## முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் பிள்ளைகள் 10 பேருக்கு சைக்கிள் அன்பளிப்பு



முல்லைத்தீவு, ஒக். 21

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்பான உயிரிழை அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால்பத்துசைக்கிள்கள் வழங்கப்பட்டன.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களின் பல்வேறு தேவைகள், அவர்களின் பிள்ளைகளின் கல்வி மற்றும் பல விடயங்களிலும் கரிசனையுடன் செயற்பட்டு வரும் உயிரிழை அமைப்பு பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகவிடுத்தவேண்டுகோளுக்கிணங்க வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தினால் பத்து சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

மாங்குளத்தில் அமைந்துள்ள உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் ச.சதாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், உயிரிழை அமைப் பின் தலைவர் கோவிந்தபிள்ளை சிறிதரன், உயிரிழை அமைப்பின் செயலாளர் சுவக்கீன்பிள்ளை இருதயராசா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(ஐ)

## முள்ளியவளை துயிலும் இல்லத்தில் நேற்று மக்களால் சிரமதானப் பணி



முல்லைத்தீவு, ஒக். 21

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வீரச்சாவடைந்தமாவீரர்களின்உடலங்கள் புதைக்கப்பட்ட மாவீரர் துயிலுமிலங்கள் நவம்பர் 27 மாவீரர் நாளை முன்னிட்டுச் சிரமதான பணிகள் மூலம் சுத்திகரிக்கப்படுகின்றன

இதனடிப்படையில் வடக்கு–கிழக்கு பகுதிகளில்உள்ளமாவீரர் துயிலும்இல்லங்களைத்துப்பரவு செய்யும் பணியில் மக்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8.30மணிக்கு முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லம் துப்புரவு செய்யும் நடவடிக்கை மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டது.

பிரதேச மக்கள், நலன்விரும்பிகள் பலரும் கலந்து கொண்டு மாவீரர் துயிலும் இல்லத்தை துப்பரவு செய்தனர். (ஐ)

## செவ்வாயன்று கொழும்பில் ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 21

அரசின் ஊழல் மோசடிகள் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செய லாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

நாட்டில்வரிச்சுமை அதிகரிக்கப்பட்டுள்ளமை, எரிபொருள் விலை அதிகரிப்பு, போக்குவரத்துக் கட்டண அதிகரிப்பு, எட்கா உள்ளிட்ட நாட்டைத் தாரை வார்க்கும் ஒப்பந்தங்கள், அம்பாந்தோட்டைத் துறைமுகம், மத்தள விமான நிலையம், திருகோணமலை எண்ணெய்த் தாங்கிகள் உள்ளிட்ட தேசிய வளங்களைச் சர்வதேச நாடுகளுக்கு விற்பனை செய்தல் மற்றும் அரசின் ஊழல் மோசடிகள் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக ரில்வின் சில்வா மேலும் கூறினார். (ஐ)

## குளத்தில் தவறி விழுந்த சிறுவன் சடலமாக மீட்பு

வவுனியா, ஒக். 21

ஈச்சம்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பூம்புகார் கிராமத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் அந்தக் கிராமத்தையே சோகமயமாக்கியுள்ளது.

வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தேவகுமார் அனோசன் (வயது14) என்ற சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் தனது வீட்டுக்கு அருகில் உள்ள வைரவ மூன்று முறிப்புக் குளத்திற்குச் சென்றபோது தவறுதலாக நீரில் வீழ்ந்து மூழ்கி மரணமானான்.

கூக்குரல் கேட்டதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்தவர்கள் சிறுவனைக் காப்பாற்ற முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை.

குளத்திலிருந்து எடுக்கப்பட்ட சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மாட்டுடன் மோதுண்டதால் இளைஞன் பரிதாபச் சாவு!

மட்டக்களப்பு, ஒக். 21

வீதியில் குறுக்கே சென்ற எருமை மாட்டுடன் மோதி 19 வயதுடைய இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிந்தான்.

பொத்துவில் குஞ்சானோடைப் பகுதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது.

பொத்துவில் ஊறணிப் பகுதியைச்சேர்ந்த ரி.ஜினியன் (வயது–19) என்ற இளைஞனே உயிரிழந்தான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளில்பயணித்த இளைஞன் எருமை மாட்டுடன் மோதிசம்பவ இடத்திலேயேஉயிரிழந்தான். எருமை மாடும் உயிரிழந்தது.

இளைஞனின் சடலம் பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் மேலும் கூறினர். (ஐ)

## அமைச்சர் சுஜீவவுக்கு கொலை அச்சுறுத்தல்



கொழும்பு, ஒக். 21

தனக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாகவும், இது தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் சர்வதேச வர்த்தகம் மற்றும் மூலோபாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

என் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடுசெய்து அண்மையில் விளக்கம் கொடுத்தேன். அதே தினத்தன்று, கொழும்பு சங்கிரீலா ஹோட்டலில் பிரதமரும் நானும் இரவு நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்தோம்.

இரவு 10.00 மணிக்கு எனக்குத் தொலைபேசி அழைப்பொன்று வந்தது. அன்ரன் தேசப்பிரிய என்பவரே தொடர்பு கொண்டிருந்தார். எனக்கு தேவையற்ற வார்த்தையில் திட்டிவிட்டு, கொலை செய்யப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுத்தார். 40 விநாடிகள் பேசிக் கொண்டு செல்லும்போது நான் தொலைபேசியைத் துண்டித்தேன்–என்றார்.(ஐ)

# பத்திரிகையாளர் ஜமால் கசோகியை இரு அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர்!

## குற்றத்தை ஒப்புக் கொள்கிறது சவுதி

ரியாத்,ஒக்.21

சவுதிபத்திரிகையாளர்ஜமால் கசோகி மூத்த அதிகாரிகள் இருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டார் என சவுதி அரேபிய ஊடகம் தெரிவித்து உள்ளது.

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியைப் பற்றிக் கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் பத்திரிகையாளர் ஜமால் கசோகி (வயது 59). சமீபத்தில் இஸ்தான்புல்நகரில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்ற அவர், மாயமானார்.

அவர் அந்த தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய முகவர்களால் கொல்லப்பட்டு விட்டார் என்றுபலதரப்பிலும்குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவுதி அரேபியா மறுத்து வந்தது.



பத்திரிகையாளர்ஜமால்கசோகி சவுதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எச்சரித்தார்.

இவ்விவகாரம் ஒரு சர்வதேசக் கண்டனத்தை ஏற்படுத்தியதுடன் மேற்கு நாடுகளுடனான உறவுகளுக்கு சவுதி அரேபியாவுக்கு நெருக்கடி அளித்தது.

பத்திரிகையாளர்ஜமால்கசோகி மாயமானமை தொடர்பாக மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவிட்டார். சவுதி அரேபிய அதிகாரிகளின் அனுமதி பெற்று, துருக்கி பொலிஸ் அதிகாரிகள் இஸ்தான்புல் துணைத் தூதரகத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர்.

இந்நிலையில், இஸ்தான்புல்லில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்தில் ஜமால் கசோகி கொல்லப்பட்டார் என சவுதி அரேபியா செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இரு மூத்த அதிகாரிகள் அவரைச் சுட்டுக் கொன்றனர் என அந்தப் பத்திரிகை கூறியுள்ளது.

பத்திரிகையாளர்ஜமால்கசோகி கொல்லப்பட்டதற்கு சவுதி அரேபியா அரசு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளது.

அரசர் சல்மான் உத்தரவின் பேரில் சவுதி அல்-குஹ்தானி என்பவர் நீக்கப்பட்டு உள்ளார் என்று துணை உளவுத்துறைத் தலைவர் அஹ்மத் அசிரி வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# பத்திரிகையாளர் கசோக்கியின் சடலம் எங்கே? சவுதியிடம் மேலும் விளக்கம் கோரிகிறது அமெ.

பத்திரிகையாளர்ஜமால்கசோகி கொலை குறித்து சவுதி அரேபியா தெரிவித்துள்ள தகவல்கள் போதுமானவையல்ல, அவரது உடல் எங்கே என்ற விவரத்தை வெளியிட வேண்டும் என அமெரிக்க கூறியுள்ளது.

கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் ஜமால் அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் போஸ்டில் சவுதி அரசை விமர்சித்தும் குறிப்பாக அதன் இளவரசர் முகமது பின் சல்மானை விமர்சித்தும் கட்டுரைகளை எழுதி வந்தார்.

துருக்கியைச் சேர்ந்த பெண்ணை ஜமால் திருமணம் செய்யவிருந்த நிலையில், கடந்த வாரம் துருக்கி இஸ்தான்புல் நகரிலுள்ள சவுதி தூதரக அலுவலகத்துக்குச் சென்றவர் மாயமானார்.

இவ்வழக்குத் தொடர்பாக, சவுதியைச் சேர்ந்த 15 பேரின் பெயரைத் துருக்கி வெளியிட்டது. ஜமாலை சவுதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான வீடியோ மற்றும் ஓடியோ ஆதாரத்தை துருக்கி வெளியிட்டது.

சவுதி பத்திரிகையாளர் ஜமால் மாயமான விவகாரத்தில் நாளுக்கு நாள் பல அதிர்ச்சியான செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. சவுதி அரேபியா தூதரகத்தின் உள்ளே ஜமால், விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார் எனவும் துருக்கி சமீபத்தில் குற்றம்சாட்டியது.

இந்த விவகாரம் சர்வதேச அளவில் சவுதி அரேபியாவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உட்பட பல நாட்டு தலைவர்கள் கண்டித்துள்ளனர். இந்த நெருக்கடியை அடுத்த துருக்கி நாட்டின் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்தில் ஜமால் கொலை செய்யப்பட்டதாக முதன் முறையாக சவுதி ஒப்புக்கொண்டுள்ளது. மேலும் இதுதொடர்பாக 18 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகவும் சவுதி அரேபியா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள வெள்ளை மாளிகை செய்தித்தொடர்பாளர் சாண்டர்ஸ் கூறுகையில் "ஜமால் கொல்லப்பட்டமையை சவுதி அரேபியா உறுதிசெய்துள்ளது. நடந்த சம்பவம் வருந்தத்தக்கது.

"ஜமால் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம். இதுபற்றி சவுதி அரேபியா விரிவான விசாரணை நடத்த வேண்டும். சர்வதேச விசாரணை தொடர்பாக ஆலோசித்து வருகிறோம்" எனக் கூறியுள்ளார்.

இதுகுறித்து அமெரிக்க எம்.பி. ஸ்வால்வெல் கூறுகையில் "சவுதி அளிக்கும் விளக்கம் போதுமானதாக இல்லை. ஜமால் உடல் எங்கே என்பது உள்ளிட்ட விவரங்களை அந்நாடு வெளியிட வேண்டும். அவர்கள் கூறுவதைநம்பாமல் அதனை ஆய்வு செய்ய வேண்டும். அமெரிக்க பின்பற்றி வரும் பண்புகளை விட்டுக்கொடுக்க கூடாது. சவுதி வியத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" – எனக் கூறினார்.

(உ)

# பாக். அரசு அலுவலகங்களுக்குள் இனி துப்பட்டாவுடன்தான் பெண்கள் வரலாம்

பாகிஸ்தானில் அரசு அலுவலகங்களில் நுழையும் பெண்கள் தலையில் முக்காடு அல்லது துப்பட்டா அணிய வேண்டும் என்ற புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த ஒகஸ்டு மாதம் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. அதில் இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் – இ – இன்சாப் கட்சி போட்டியிட்டது. அப்போது தேர்தல் பிரசாரம் செய்த இம்ரான் கான் தேர்தலில் வெற்றி பெற்றால் 'நவீன பாகிஸ்தானை உருவாக்குவேன். சர்வாதிகாரத்தை ஒழிப்பேன்' என்றார். ஆனால் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த பின் அதற்கு நேர்மாறான நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

பஞ்சாப் மாகாண தலைநகர் லாகூரில் தலைமைச்செயலகம் உள்ளது. 'அங்கு நுழையும் பெண்கள் தலையில் முக்காடு அல்லதுதுப்பட்டா அணியவேண்டும்' என்ற புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவல் காரணமாக சித்ராபட் என்ற பெண் லாகூரில் உள்ள தலைமை செயலகம் சென்றார். அவர் தலையில் முக்காடு மற்றும் துப்பட்டா அணியாமல் சென்று இருந்தார்.

அதைப் பார்த்த அலுவலக காவலாளிகள் அவரை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர். முக்காடு அல்லது துப்பட்டா இல்லாமல் பெண்களை உள்ளே நுழைய விடக்கூடாது என பஞ்சாப் சுகாதார நல மந்திரி டாக்டர் ரஷித் உத்தரவிட்டுள்ளார் எனக் கூறினார்.

அந்த உத்தரவை காட்டும் படி சித்ராபட் அவருடன் வாக்குவாதம் செய்தார். அதற்கு அவர் வாய்வழி உத்தரவிட்டுள்ளார் எனக் கூறினார். இத்தகவலை சித்ராபட் டுவிட்டர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார். இதுதான் இம்ரானின்நவீனபாகிஸ்தானா? சர்வாதிகாரம் ஒழிப்பா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

பஞ்சாப் மாகாணத்தில் கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி ஆட்சியில் இருந்தது. சமீபத்தில் நடந்த தேர்தலில் அக்கட்சி தோல்வி அடைந்து இம்ரான்கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக் – இ – இன்சாப் கட்சி ஆட்சி அமைத்துள்ளது.

# சிறுமிகளைப் பலாத்காரம் செய்த 20 பேருக்கு 221 வருடங்கள் சிறை

## இங்கிலாந்து நீதிமன்றம் தீர்ப்பு

இங்கிலாந்தில் ஹடர்ஸ்பீல்டு நகரில் சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்த 20 பேர் கொண்ட குழுவுக்கு 221 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டுநீதிமன்றம்உத்தரவிட்டுள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில்– இங்கிலாந்தின் ஹடர்ஸ்பீல்டு நகரில் 2004 முதல்2011வரையான காலத்தில் (7 ஆண்டுகள்) 20 பேர் கொண்ட குழு ஒன்று அப்பகுதியில் உள்ள சிறுமிகளை மது குடிக்க வைத்து பாலியல் துன்புறுத்தல் மற்றும் பலாத்காரத்துக்கு உள்ளாக்கி வந்துள்ளது. இது தொடர்பாக 20பேர் கொண்ட குழுவை இங்கிலாந்து பொலிஸார் கைது செய்தனர்.

அவர்களின் மீது 120 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. இது தொடர்பாக நடந்தவிசாரணையில்குற்றவாளிகளின் தண்டனை நிரூபிக்கப்பட்டு பல ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. தண்டனையின் முழு விவரம் இதுவரை வெளியிடப்படவில்லை. எனினும் கும்பலில் உள்ள அனைவருக்கும் மொத்தமாக 221 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று செய்தி வெளியிட்டுள்ளது.

தண்டனைவிதிக்கப்பட்டவர்கள் அனைவரும் ஆசியவாவைப் பூர்வீகமாகக் கொண்ட இங்கிலாந்து குடிமக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் இத்தீர்ப்புக்கு சிறுமிகளின் குடும்பத்தார் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவுக்குள் நுழையமுயன்ற குடியேறிகள்



மத்திய அமெரிக்க நாடுகளில் இருந்து கூட்டமாக அமெரிக்காவுக்குள் நுழைகின்ற நூற்றுக்கணக்கான குடியேறிகள் மெக்ஸிகோவின் தெற்கு எல்லையில் இருக்கும் நுழைவாயிலை உடைத்து அமெரிக்காவுக்குள் வரமுயன்றுள்ளனர்.

குவாட்டமாலா எல்லை தடுப்புக்களை உடைத்து நுழைந்த குடியேறிகள் ராணுவம் இல்லாத பகுதியில் கலவரத் தடுப்பு பொலிஸாருடன் மோதினர்.

அமெரிக்காவில் நுழைய விடாமல் குடியேறிகளை தடுத்து வைப்பதற்கு வெள்ளிக் கிழமை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மெக்ஸிகோவுக்கு நன்றி தெரிவித்தார்.

வன்முறை மற்றும் வறுமையால் தாங்கள் உயிர்தப்பி வருகின்றனர் என ஹொண்டுரஸைச் சேர்ந்த பெண்களும், குழந்தைகளும் உள்ளடங்கிய இந்த குடியேறிகள் கூறுகின்றனர்.

அமெரிக்க எல்லையை மூடப்போவதாகவும், தேவைப்பட்டால் ராணுவம் இதில் ஈடுபடுத்தப்படும் என்றும் அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

# தசராக் கொண்டாட்டக் கூட்டத்தை பந்தாடியது ரயில்; 62 பேர் சாவு

## அமிர்தசரஸ் கொடூரத்தில் எண்பது பேர் படுகாயம்

அமிர்தசரஸ்,ஒக்.21

பஞ்சாபில் தசரா விழாவின் போது நடக்கும் ராவண வதம் நிகழ்ச்சியை தண்டவாளத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது ரயில் மோதியதில் 62 பேர் அதே இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 80இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி உட்பட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.



தசரா விழா நேற்றுமுன்தினத்துடன் கோலாகலமாக நிறைவடைந்தது. இதை முன்னிட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ராவணனை வதம் செய்யும் நிகழ்ச்சிகள் பிரம்மாண்டமாக நடந்தன.

இதன் ஒருபகுதியாக பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் நகருக்கு அருகில் உள்ள ஜோதா பதக் என்ற இடத்தில் ராவண வதம் நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நடந்தது. இந்த நிகழ்ச்சிக்கு பஞ்சாப் சுற்றுலாத் துறை அமைச்சர் நவ்ஜோத் சிங் சித்துவின் மனைவியும் காங்கிரஸ் பிரமுகருமான நவ்ஜோத் கவுர் சித்து சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

இங்குள்ள மைதானத்தில் ராவணனின் உருவப்பொம்மை மிகப் பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்தது. ராவண வதத்தைக் காண நூற்றுக் கணக்கான மக்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர். நிகழ்ச்சியின் இறுதிக்கட்டமாக ராவணனின் உருவ பொம்மையை தீயிட்டு எரிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை மைதானத்துக்கு அருகில் உள்ள தண்டவாளத்தில் நின்று நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கண்டுகளித்துக் கொண்டி ருந்தனர். ராவணன் உருவ பொம்மை எரிக்கப்பட்டதும் உற்சாகத்தில் ஏராளமானோர் ஆரவாரம் செய்தனர். அந்த நேரத்தில் ஜலந்தரில் இருந்து அமிர்தசரஸ் செல்லும் ரயில் வேகமாக வந்தது. ராவண வதம் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்கள் மீது கண்ணிமைக்கும் நேரத்தில் பயங்கரமாக ரயில் மோதியது.

அங்கிருந்த மக்கள் மரண ஓலமிட்டனர். ரயில் தண்டவாள பகுதி, மைதானம் எங்கும் உடல் பாகங்கள் சிதறி ரத்தக் காடாகக் காட்சியளித்தது. மக்கள் பீதியில் அலறியபடி நாலாபுறமும் சிதறி ஓடினர். எங்கு பார்த்தாலும் தங்கள் மகன், கணவன், மனைவி என உறவுகளை இழந்தவர்களின் அழுகுரலாக இருந்தது. அந்த இடமே போர்க்களம் போல காட்சி அளித்தது. இந்த விபத்தில் 60 பேர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். மேலும், 80இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ராவண வதம் நடந்தபோது தண்டவாளப் பகுதியில் 300இற்கும் மேற்பட்டோர் நின்று கொண்டிருந்தார்கள் என்று உயிர் தப்பியவர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. இதற்கிடையில் தகவல் அறிந்து மீட்புப் படையினர் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்ட னர்.

இந்த விபத்துக் குறித்து உள்ளூர் காரார் ஒருவர் கூறும் போது, “தசரா விழாவின் போது இந்தப் பகுதியில் ரயில்களை மெதுவாக இயக்க ரயில்வே துறையிடம் பேசும்படி சம்பந்தப்பட்ட தொகுதி எம்.எல்.ஏ., எம்.பிக்களிடமும் அதிகாரிகளிடமும் பல முறை கூறிவிட்டோம். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை” என்றார்.

மற்றொரு உள்ளூர்காரர் கூறும் போது, “ரயில் ஓட்டுநர் எச்சரிக்கை ஒலியை எழுப்ப வில்லை. அதனால், தண்டவாளத்தில் நின்றிருந்த பொது மக்களால் ரயில் வருவதை அறியமுடியவில்லை” என்று கோபமாகக் கூறினார்.

### ராம்நாத், மோடி இரங்கல்

விபத்தில் 62 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பிரதமர் நரேந்திர மோடி, பஞ்சாப் முதல்வர் அமரீந்தர் சிங் பாதல், பா.ஜ.க. தலைவர் அமித் ஷா, காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். மேலும் விபத்து நடந்த இடத்தில் நடைபெறும் மீட்புப் பணிகளை முதல்வர் அமரீந்தர் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அதிகாரிகளுக்கு உத்தரவுகளை வழங்கினார்.

விபத்தில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக நேற்று பஞ்சாப் முழுவதும் அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

### ரூ.7 லட்சம் நிவாரணம்

ரயில் விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என்று முதல்வர் அமரீந்தர் சிங்பாதல் உடனடியாக அறிவித்தார். காயம் அடைந்தவர்களுக்கு சிறந்த மருத்துவச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

இதுதவிர இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.2 லட்சமும் காயம் அடைந்தவர் களுக்கு தலா ரூ.50 ஆயிரமும் மத்திய அரசு சார்பில் வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

### நாடு திரும்புகிறார் கோயல்

அமெரிக்கா சென்றுள்ள ரயில்வே அமைச்சர் பியூஷ் கோயல், விபத்துக் குறித்துத் தகவல் அறிந்து தனது எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிட்டு, உடனடியாக நாடு திரும்புகிறார். மேலும், தனது ட்விட்டர் பக்கத்தில், “ரயில் விபத்தில் படுகாயம் அடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். விபத்து நடந்த பகுதி யில் ரயில்வே அதிகாரிகள் வேகமாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்” என்று தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

ரயில் தண்டவாளத்துக்கு அருகில் உள்ள மைதானத்தில் ராவண வதம் நிகழ்ச்சி நடத்த காங்கிரஸ் அரசு அனுமதி அளித்தது தவறு என்று எதிர்க்கட்சியான அகாலி தளம் குற்றம்சாட்டி உள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு பஞ்சாப் சுற்றுலா துறை அமைச்சர் நவ்ஜோத் சிங் சித்துவின் மனைவி நவ்ஜோத் கவுர் சித்து சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். ஆனால், விபத்து நடந்த உடனேயே அந்த இடத்தில் இருந்து அவர் சென்றுவிட்டார் என்று அக்கட்சி குற்றம்சாட்டி உள்ளது. மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி கூறும் போது, “இந்த விபத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்று முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது” என்று கூறியுள்ளார்.



## செல்பி மோகத்தால் வந்த வினையாம்!

தசராக் கொண்டாட்டக் கூட்டத்துக்குள் ரயில் பாய்ந்த கோர விபத்திற்குக் காரணம், மக்களின் செல்பி மோகம்தான் எனத் தெரிய வந்துள்ளது.

தசராக் கொண்டாட்டத்தில் ராவணனின் உருவ பொம்மை எரிக்கப்பட்ட போது, ரயில் வருவதை கண்டு கொள்ளாமல் ஏராளமானோர் தண்டவாளத்தின் மீது நின்று அதனை தங்களின் மொபைல் போனில் படம் பிடித்துக் கொண்டிருந்தனர். ஏராளமானோர் செல்பி எடுத்துக் கொண்டிருந்தனர். இவை விபத்து நடந்த போது எடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளில் பதிவாகி உள்ளன.

தண்டவாளத்தில் நின்றவர்கள் மீது ரயில் மோதி விட்டு சென்ற பிறகும் பலர் எவ்வித பதற்றமும் இன்றி தொடர்ந்து தங்களின் மொபைல் போன்களில் விபத்து நடந்த காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டிருந்தனர். இதற்கு பலரும் கண்டனமும், வேதனையும் தெரிவித்துள்ளனர்.



## பச்சை சமிக்ஞையே தரப்பட்டது மக்கள் கூட்டம் பற்றித் தெரியாது

### கைதான ரயில் சாரதி தகவல்

அமிர்தசரஸ்,ஒக்.21

தசராக் கொண்டாட்டக் கூட்டத்தின் மீது ரயில் பாய்ந்த விபத்துத் தொடர்பாக ரயிலின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். அவர் ‘எனக்கு கிரீன் சிக்னல் தான் (பச்சை சமிக்ஞைதான்) கொடுக்கப்பட்டது,’ எனத் தெரிவித்துள்ளார்.

ரயிலுக்கு கிரீன் சிக்னல்தான் கொடுக்கப்பட்டது, நூற்றுக்கணக்கான மக்கள் ரயில்வே தண்டவாளத்தில் நிற்கிறார்கள் என்பது தொடர்பாக எனக்கு எந்த ஒரு ஐடியாவும் கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். அவரிடம் பஞ்சாப் பொலிஸும், ரெயில்வே பொலிஸும் விசாரித்துள்ளன.

விபத்து நேரிட்ட போது புகைமூட்டம் இருந்ததாகவும், பட்டாசுப் புகை,சத்தம் மற்றும் மக்கள் கோஷமும் இருந்துள்ளன எனக் கூறப்படுகிறது.

இதற்கிடையே அனுமதியின்றி ரயில்வே பகுதியில் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்களை பொலிஸார் வலைவீசித் தேடி வருகின்றனர்.

## பசியற்ற உலகைப் படைக்க விழித்தெழுவோம் - திருத்தந்தை

இன்றைய உலகில் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது அனைத்துலக ஒருமைப்பாட்டுணர்வு குறைந்து வருவதன் அடையாளமாக உள்ளது என கவலையை வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள். உணவு தினத்தையொட்டி உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தலைவருக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## இவ்வாண்டு உலக உணவு தின தலைப்பு

இவ்வாண்டு உலக உணவு தின தலைப்பான – நம் நடவடிக்கைகளே நம் வருங்காலம்: 2030 ஆம் ஆண்டிற்குள் பசியற்ற உலகைப் படைத்தல் – என்பது நாம் ஒவ்வொருவரும் விழித்தெழுவதற்கு விடப்படும் அழைப்பாக உள்ளது. ஒவ்வொரு மனிதருக்கும் போதிய அளவு தரமான உணவு கிடைப்பதற்குரிய வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

# லோங் அடிகளாரால் ஆஸ்திரேலியாவில் ஆரம்பிக்கப்பட்ட பிறிஸ்பேன் ஐயோனா கல்லூரி யாழ் பத்திரிசியார் கல்லூரிக்கு விஜயம்





யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் புகழ் பூத்த அதிபராக 18 ஆண்டுகள் பணியாற்றிய லோங் அடிகளாரால் ஆஸ்திரேலியா பிறிஸ்பேன் நகரில் ஆரம்பிக்கப்பட்ட ஐயோனா கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அடங்கிய குழுமத்தினர் அண்மையில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரிக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டனர் என்பது அண்மைக்கால வரலாற்றுச் செய்திகளில் சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்பட வேண்டிய செய்தியாகும்.

மேற்படி குழுவினரை கல்லூரி அதிபர் ஏ.பி. திருமகன் அடிகளார் தலைமையிலான பத்திரிசியார் கல்லூரி சமூகத்தினரால் வரவேற்கும் நிகழ்வு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆஸ்திரேலியா பிறிஸ்பேன் ஐயோனா கல்லூரி சமூகத்தினர் கௌரவிக்கப்பட்டமையோடு பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. இறுதியாக இரு கல்லூரிகளுக்கும் இடையில் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டி கல்லூரியின் புற்தரை ஆடுகளத்தில் நடைபெற்றது.

இந்த விஜயம் இரு கல்லூரிக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துதவும் உறவுகளைப் பலப்படுத்தவும் கூடியதாக அமைந்திருந்தது. புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராக 18 ஆண்டுகள் அரும்பணி புரிந்த லோங் அடிகளாராலேயே ஆஸ்திரேலியாவில் பிறிஸ்பேன் ஐயோனா கல்லூரி 1958 இல் ஆரம்பிக்கப்பட்டது என்பது இங்கு சிறப்பு முக்கியத்துவத்துடன் நோக்கப்படவேண்டியதாகும்.

## பத்திரிகையாளர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டு புனித யோசேப்பு

அமைதி என்பதே தகவல் பரிமாற்றத்தின் முதல் நிபந்தனை. ஏனெனில் மௌனமாக இருப்பதன் வழியாக மட்டுமே மற்றவர்களுக்குச் செவிமடுக்க முடியும் என தன்னை சந்திக்க வந்திருந்த பத்திரிகைத் துறையினரிடம் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். இத்தாலிய கத்தோலிக்க நாளிதழின் உயர் மட்ட அதிகாரிகளை வத்திக்கானில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பு தகவல் தொடர்புத் துறையில் பணியாற்றுவோருக்கு தன் மௌனம் மற்றும் செவிமடுத்தல் வழியாக நல்ல எடுத்துக்காட்டாக உள்ளார் என்றார். தனக்குப் புரியாத சூழல்களில் கூட இருளில் தடுமாற்றமின்றி நடக்கவும் தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவர்களையும் ஒப்படைக்கப்பட்ட பணியையும் பொறுப்புடன் வழி நடத்தவும் புனித யோசேப்பு நமக்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாக உள்ளார். சமூகத்தொடர்புத்துறை என்பது உண்மை, அழகு, பொதுநலன் போன்றவைகளை நோக்கி திரும்பியதாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய திருத்தந்தை இன்றைய உலகில் மிக வேகமான அதேவேளை மேலோட்டமான கலாச்சாரப் போக்கைப் பார்க்கின்றோம் எனவும் கவலையை வெளியிட்டார். மற்றவர்களுக்கு செவிமடுக்கத் துவங்கும்போது கலந்துரையாடல் பிறக்கிறது. இந்த கலந்துரையாடலே அச்சத்தையும் சந்தேகங்களையும் போக்கி உறவுகளை வளர்க்கிறது எனமேலும் கூறினார் திருத்தந்தை.

# நற்செய்தியின் மகிழ்வை பிறருடன் பகிரும் மறை பணியாளராகுங்கள்

நற்செய்தியின் மகிழ்வைத் தாங்கிச் செல்பவர்களாக உலகில் செயற்படுங்கள். அயர்லாந்தில் இடம்பெற்ற குடும்பங்களின் உலக மாநாட்டு இறுதித் திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உலகில் ஒப்புரவிற்கு தடையாக இருப்பனவற்றை அகற்றி ஒருவருக்கொருவர் ஊக்கமளிப்பதன் ஆதாரமாக மாறுவதன் வழியாக கிறிஸ்தவக் குடும்பங்கள் நற்செய்தியின் மகிழ்வை பரப்பமுடியும் என்றார்.

இருண்டதொரு காலத்தில் வாழ்ந்த ஐரோப்பாவுக்கு நற்செய்தியின் ஒளியை எடுத்துச் சென்ற புனித கொலம்பன் அவர்களின் எடுத்துக்காட்டையும் முன்வைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். பீனிக்ஸ் பூங்காவில் இடம்பெற்ற இத்திருப்பலியின் துவக்கத்தில் கடந்த காலத்தில் அயர்லாந்து திரு அவையில் இடம்பெற்ற தவறான செயல்களுக்காக மன்னிப்பையும் வேண்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திரு அவையின் அதிகாரிகள் சிறார் பாலியல் முறைகேடுகளில் ஈடுபட்டமை மற்றும் முக்கிய பொறுப்பிலுள்ளோர் அது குறித்துபாராமுகமாக இருந்தமை ஆகியவை குறித்த தன் கவலையை வெளியிட்ட திருத்தந்தை அதற்கான மன்னிப்பையும் வேண்டினார்.

திருமணமாகமலேயே குழந்தைகளைப் பெற்ற தாய்மார்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர் கத்தோலிக்க மையங்களில் தங்கியிருந்தபோது அவர்களின் குழந்தைகள் அவர்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டு மற்றவர்களுக்கு தத்துக் கொடுக்கப்பட்டமை குறித்தும் தன் ஆழ்ந்த கவலையை வெளியிட்டு அத்தாய்மார்கள் மற்றும் பிரித்தெடுக்கப்பட்ட குழந்தைகளிடம் மன்னிப்பை வேண்டினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

ஒவ்வொரு நாளும் குடும்பங்களின் வாழ்வில், தூய ஆவியார் வழங்கும் கொடை வந்துகொண்டேயிருக்கிறது, இதுவே, இறைவனின் கொடையாகவும் வாக்குறுதியாகவும் உள்ளது என்று கூறியத் திருத்தந்தை, இக்கொடையை மற்றவர்களுடன் பகிர்வதற்கு, குடும்பங்களுக்கு ஊக்கமளித்தார். இயேசுவின் படிப்பினைகள் கடைப்பிடிப்பதற்கு அவ்வளவு எளிதானவை அல்ல என்பதை நாம் ஏற்றுகொள்ள வேண்டியிருக்கிறது ஏனெனில், தீமைச் செய்தவர்களை மன்னிப்பதும் குடியேற்றதாரர்களையும் தெரியாதவர்களையும் வரவேற்பதும் ஏமாற்றங்களை ஏற்றுக்கொள்வதும் பிறக்கவிருக்கும் குழந்தைகள், வயதுமுதிர்ந்தோர், பலவீனர்கள் ஆகியோரை பாதுகாப்பதும் மக்களுக்கு இயலாததாக உள்ளது என்பதை இன்று நேரடியாகவே பார்க்கிறோம் என்று கூறியத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய நேரங்களில்தான் 'நீங்கள் என்ன சொல்கிறீர்கள், நீங்களும் என்னை விட்டுப் போய்விடப் போகிறீர்களா?' – என்று, கடவுள் நம்மைப்பார்த்து கேட்கிறார் எனக் கூறினார்.

இத்திருப்பலியின் இறுதியில் அடுத்த உலக குடும்பங்கள் மாநாடு 2021ஆம் ஆண்டு உரோம் நகரில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

# பானமாவுக்குச் செல்லும் பாத்திமா அன்னை

2019ஆம் ஆண்டு சனவரி 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதி முடிய பானமா நாட்டில் நிகழும் உலக இளையோர் நாள் நிகழ்வுகளையொட்டி வரலாற்று சிறப்புமிக்க பாத்திமா அன்னை மரியாவின் திரு உருவம் பானமா நாட்டிற்கு வருகை தரும் என்று பானமா பேராயர் அறிவித்தார். பாத்திமா திருத்தலம் சென்று, அன்னையை தரிசிக்கும் திருப்பயணிகள் அடையும் பரிபூரண பலனை இளையோர் நாள் நிகழ்வுகளில் பங்கேற்கும் இளையோரும் அடையவேண்டுமென்ற நோக்கத்துடன் இந்த சிறப்பான முடிவு, பாத்திமா திருத்தல பொறுப்பாளர்களால் எடுக்கப்பட்டது.

பாத்திமா அன்னையை நேரில் கண்ட அருள்சகோதரி லூசியா அவர்கள் வழங்கிய விவரங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாத்திமா அன்னையின் திரு உருவம் 1947ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி முதன் முதலாக மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து பல ஆண்டுகள் பாத்திமா அன்னையின் திரு உருவம் உலகின் 64 நாடுகளுக்கு அமைதி அன்பு ஆகிய செய்திகளைத் தாங்கி பவனியாகக் கொண்டு செல்லப்பட்டது. மிக முக்கியமான தருணங்களில் மட்டுமே இந்த திரு உருவம் பாத்திமாவிலிருந்து வெளியே கொண்டு செல்லப்படும் என்ற முடிவு 2000ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. இளையோரின் உலக நாள் நிகழ்வுகள் மிக முக்கியமான தருணம் என்பதாலும் இளையோர் நாள் நிகழ்வுகளை உருவாக்கிய புனித திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் பாத்திமா அன்னை மீது மிகுந்த பற்றுகொண்டவர் என்பதாலும் இத்திரு உருவம் பானமா நாட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறது என பாத்திமா திருத்தல முதன்மை அருள்பணியாளர் கூறினார்.

2019ஆம் ஆண்டு சனவரி 22ஆம் திகதி முதல் 27ம் திகதி முடிய நடைபெறும் உலக இளையோர் நாள் நிகழ்வுகளையொட்டி சனவரி 21ஆம் திகதி பாத்திமா அன்னையின் திரு உருவம் பானமா நாட்டை அடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 27ஆம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தும் நிறைவுத் திருப்பலியில் பீடத்தின் அருகே வைக்கப்படும் பாத்திமா அன்னையின் திரு உருவம் ஜனவரி 29ஆம் திகதி மாலை பானமா நாட்டிலிருந்து மீண்டும் போர்த்துக்கல் நாட்டிற்கு திரும்பும்.

# புனித அன்னை தெரேசாவின் 108 ஆவது பிறந்தநாள் நினைவு

வாழ்வு என்பது இறைவன் மனிதர்களுக்கு வழங்கிய ஒரு மாபெரும் கொடை என்பதையும் அந்தக் கொடை இறைவனுக்கு மட்டுமே உரியதொரு கொடை என்பதையும் அன்னை தெரேசா தன் வாழ்வின் வழியே உணர்த்தினார் என கொல்கத்தா பேராயர் தாமஸ் டிசூசா அவர்கள் கூறினார்.

ஆகஸ்ட் 26 புனித அன்னை தெரேசா பிறந்ததன் 108வது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்க திருப்பலி நிறைவேற்றிய பேராயர் டிசூசா அவர்கள் தன் மறையுரையில் இவ்வாறு கூறினார்.

இத்தருணத்தில் தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட அன்னை தெரேசா பிறரன்பு சகோதரிகள் சபையின் தலைவி மேரி பிரேமா அவர்கள் பலருடைய வாழ்க்கை அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களை வைத்து அளக்கப்படும் வேளையில் அன்னை தெரேசாவின் வாழ்க்கை அன்பை அளவுகோலாகக் கொண்டிருந்தது என்று கூறினார்.

அன்னையின் நினைவுத் திருப்பலியைத் தொடர்ந்து, பேராயர் இல்லத்தில் நடைபெற்ற கொண்டாட்டத்தில் மாசிடோனியா குடியரசிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். '

மாசிடோனிய குடியரசு வழங்கிய அன்னை தெரேசாவின் வெண்கலச் சிலையை பேராயர் டிசூசா அவர்கள் அர்ச்சித்தார்.

1910ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26ஆம் திகதி மாசிடோனியா குடியரசில் பிறந்த அன்னை தெரேசா அவர்கள் 1997ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் திகதி கொல்கத்தாவில் தன் 87ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

2003 ஆம் ஆண்டு திருத்தந்தை 2 ஆம் ஜான்பால் அவர்களால் அருளாளராகவும் 2016ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதராகவும் உயர்த்தப்பட்ட புனித அன்னை தெரேசா கொல்கத்தா உயர்மறை மாவட்டத்தின் இணைப் பாதுகாவலராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

# ஜனாதிபதியும் பிரதமரும் ஒற்றுமைப்படவேண்டும்

## அமைச்சர் மனோ வேண்டுகோள்



கொழும்பு, ஒக். 21

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் நாட்டு மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையை மாற்றியமைத்துக் கொள்ளுமாறு நாட்டின் இரு தலைவர்களுக்கும் தான் வேண்டுகோள் விடுப்பதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பன்னிப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்- தலைவர்களிடையே காணப்படும் இணக்கப்பாடின்மை காரணமாக மக்கள் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர். இந்த அதிருப்தி மக்களைத் தவறான திசையில் வழி நடத்துகின்றது.

இந்த நல்லாட்சி அரசு வந்ததன் பின்னர் நாட்டில் ஜனநாயகம் வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆட்சிக் காலத்தை விடவும் மக்கள் நிம்மதியை உணர்கின்றனர். இதனால் இந்த நல்லாட்சி அரசு தொடர வேண்டும் என நாம் விரும்புகின்றோம்-என்றார். (ஐ)

# ஒல்லாந்தர்கள் காலத்து நாணயம் திருமலையில்



திருமலை, ஒக். 21

மூதூர் மத்திய கல்லூரியில், ஒல்லாந்தர்காலத்து வி.ஓ.சி நாணயம் ஒன்று நேற்று முன்தினம் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது

பாடசாலை மாணவன் ஒருவன் பாடசாலை பிரதான வாயில் முன்னால் குறித்த நாணயத்தைக் கண்டெடுத்துள்ளான்.

திருகோணமலை, மூதூர் மத்திய கல்லூரி அமைந்துள்ள இடத்தில், இலங்கையில் ஒல்லாந்தர்களின் முதலாவது கோட்டை அமைக்கப்பட்டிருந்தது என்பதை, இந்த நாணயக் கண்டுபிடிப்பும் ஊர்ஜிதப்படுத்துவதாக வரலாற்று ஆய்வாளரும், கல்லூரியின் பிரதிஅதிபருமான ஜனாப்.எஸ்.எம். பிஸ்ரி தெரிவித்தார்.

வி.ஓ.சி. என்பது ஒல்லாந்தர் கால கிழக்கிந்திய கம்பனி எனும் பெயரைக் குறிக்கும் சுருக்கக் குறியீடாகும். இந் நாணயம் 1750 ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டுள்ளது.

மூதூர், மத்திய கல்லூரி தேசிய பாடசாலை 500 வருடங்கள் பழமையான வரலாறு கூறும் இடத்தில், அமைந்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் இக்கண்டுபிடிப்பு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவனைத் தாக்கிய இ.போ.ச.சாரதி கைது

முல்லைத்தீவு, ஒக். 21

பனிக்கன்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை வெள்ளைச்சீருடையில்நின்றபாடசாலை மாணவனைத் தாக்கிய சாரதியை, மாங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பனிக்கன்குளம் பகுதியில் பஸ்தரிப்பு நிலையத்துக்குள் சீருடையில் நின்ற பாடசாலை மாணவன் மீது இ.போ.ச பஸ் சாரதி தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாணவரின் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸாரால் அந்தச் சாரதி நேற்றுப் பொலிஸ் நிலையம் வருமாறு அழைக்கப்பட்டிருந்தார். பொலிஸ் நிலையம் சென்ற சாரதியை மாங்குளம் பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகளில், மாணவர்கள் பஸ் மீது கல் எறிய முற்பட்டதால் தாக்கினார் எனச் சாரதி தெரிவித்துள்ளார்

ஏ-9 வீதியில் கிழவன்குளம், பனிக்கன்குளம் மாணவர்கள் மாங்குளம் பாடசாலை செல்லபஸ்கள் தம்மை ஏற்றுவதில்லை எனவும், பாடசாலைக்குத் தாமதமாகச் சென்று தண்டனைகளை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (ஐ)

# இலஞ்சம் பெற்றார்கள் என 31 அரச அதிகாரிகள் கைது

கொழும்பு, ஒக். 21

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள், இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 31 அரச அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கையூட்டுபெற்ற குற்றச்சாட்டில் மகாவலி அதிகாரசபையின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டன என ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

காணி உறுதிப்பத்திரமொன்றைப் பெறுவதற்காக 20,000 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்திலேயே, மகாவலி அதிகாரசபையின் அதிகாரி கைது செய்யப்பட்டார் என அவர் குறிப்பிட்டார்.

சந்தேநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமையுடன், இலஞ்சம்பெற்ற அதிகாரிகள்தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# சுவிஸ் பல்கலை மாணவர்களை சந்தித்தனர் இலங்கை எம்.பிக்கள்



பேர்ண், ஒக். 21

சுவிற்சலாந்து பல்கலைக்கழக மாணவர்களை இலங்கையிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் பேர்ன் மாநிலத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களான அலவத்துவல, தெஹிவல லியனகே, சுதர்சினி பெர்னான்டோ புள்ளே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், சீனித்தம்பி யோகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கல்வி உள்ளிட்ட இலங்கை தொடர்பான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அத்துடன் இந்தச் சந்திப்பானது சினேகபூர்வமானதாக இருந்தது.

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அடுத்த வாரம் புதிய உறுப்பினர்கள்

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுக்குப் புதிய உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கை அடுத்த வாரம் இடம்பெறும் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உறுப்பினர்களை நியமிப்பதற்காக அரசமைப்புச் சபை எதிர்வரும் 25 அல்லது 26 ஆம் திகதிகளில் கூடவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் கூறின.

இந்த ஆணைக்குழு கடந்த 2015 ஒக்ரோபர் 14 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. மூன்று வருடங்களுக்காக நியமிக்கப்பட்ட இதன் உறுப்பினர்களின் பதவிக் காலம் கடந்த 14 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது. இதற்காக ஏழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

# கொடும்பாவி எரித்து தொழிலாளர் போராட்டம்

## மலையகமெங்கும் ஓங்கி ஒலிக்கிறது புரட்சிக் குரல்




கொழும்பு, ஒக் 21

மலையக அரசியல் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தி போகாவத்தை கெலிவத்தை தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலவாக்கலை - நாவலப்பிட்டி பிரதான வீதியின் கெலிவத்தை சந்தியில் நேற்று இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

200 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் முதலாளிமார் சம்மேளனத்தின் கொடும்பாவியும் எரியூட்டப்பட்டதோடு, பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, தொழிலாளர்களின் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றும் தோட்ட அதிகாரியிடம் கையளிக்கப்பட்டது.

அரச ஊழியர்களுக்கு வாழ்க்கை செலவிற்கேற்ப சம்பள உயர்வு கிடைக்கின்றது. ஆனால் தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வுக்குப் போராட வேண்டியுள்ளது. முதலாளிமார் சம்மேளனத்துடன் கூட்டொப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கவாதிகள் தமக்கான ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை பெற்றுத் தரவேண்டும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# இலங்கையை சொந்த மண்ணில் வீழ்த்தியது இங்கிலாந்து அணி




இலங்கைக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி டக்வேத் லூயிஸ் முறைப்படி18 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி 3:0 எனக் கைப்பற்றியுள்ளது.

இலங்கை மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி, நேற்று சனிக்கிழமை ஆரம்பமானது.

கண்டி, பல்லேகலை மைதானத்தில் ஆரம்பமான இந்தப்போட்டியில், இலங்கை அணிக்கு தினேஷ் சந்திமாலும், இங்கிலாந்து அணிக்கு இயான் மோர்கனும் தலைமை தங்கியிருந்தனர்.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி இலங்கை அணி முதலில் களமிறங்கியது.

இதில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிக்காட்டிய நிரோஷன் டிக்வெல்ல 52, டசுன் சனக 66, திசார பெரேரா 44, அகில தனஞ்சய ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

இவர்களின் சிறப்பான ஆட்டத்தால் இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மோஹின் அலி 2, அடில் ரஷித், கிரிஸ் வோக்ஸ் மற்றும் டொம் குர்ரான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தனர்.

இந்நிலையில் 274 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 27 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்களை இழந்து 132 ஓட்டங்களை பெற்ற போது மழை குறுக்கிட்டது.

இதன் பின்னர் டக்வேத் லூயிஸ் முறைப்படி 18 ஓட்டங்களால் இங்கிலாந்து அணிவெற்றிபெற்றதாகஅறிவிக்கப்பட்டது. அவ்வணி சார்பில் ஜேசன் றோய் 45, ஜோய் ரூட் 32, இவன் மோர்கன் 31 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் அகில தனஞ்சய 2 விக்கெட்களை வீழ்த்தினார். இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது, 2 ஆவது போட்டியும் 31 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

பின்னர் 3 ஆவது போட்டியையும் 7 விக்கெட் வித்தியாசத்தில் கைப்பற்றிய நிலையில் தொடரை 3:0 என இங்கிலாந்து அணி கைப்பற்றி இலங்கை அணிக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது.

# இலங்கை கிரிக்கெட் பின்னோக்கிச் செல்கிறது




## மஹேல கடும் அதிருப்தி

இலங்கையில் கிரிக்கெட் பின்னோக்கிச் செல்கின்றது என முன்னாள் அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன கவலை தெரிவித்துள்ளார்.

ஸ்கை ஸ்போர்ட் தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் தற்போது இருக்குமிடத்திலிருந்து பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். நாங்கள் தற்போது மிகவும் கீழே உள்ளோம். தரவரிசைப்பட்டியல் இதனைத் தெளிவாக புலப்படுத்துகின்றது.

ஆட்டநிர்ணய சதி குறித்து இலங்கை இன்னமும் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. இந்த விடயத்தில் இலங்கை ஒத்துழைக்க மறுக்கின்றது. ஆகவே இந்த நிலை எதனை நோக்கி நகர்கின்றது என நாங்கள் பொறுத்திருந்து பார்க்கவேண்டியுள்ளது. இந்த நிலை ஏமாற்றமளிக்கின்றது.

நாட்டிற்காகத் தங்கள் கடமையை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டவர்களால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. இது ஏமாற்றமளிக்கின்றது. இலங்கைக் கிரிக்கெட்டை முழுமையாகச் சுத்தம் செய்யவேண்டும். இதுவே ஆரம்பகட்ட நடவடிக்கையாக அமையவேண்டும்.

ஆட்டநிர்ணயச்சதிபோன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுமானால் அணி வீரர்களின் ஓய்வறையில் நம்பிக்கை தென்படாது. இந்த விடயத்தில் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் அணி முகாமைத்துவத்திற்கும் முக்கிய கடப்பாடு உள்ளது. அவர்களும் இதனை முற்றாக அகற்ற முயலவேண்டும்.

இலங்கை கிரிக்கெட்டைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகள் உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். ஏழு, எட்டு மாதங்கள் காத்திருக்க முடியாது.

இந்த நடவடிக்கைகளை தாமதப்படுத்தினால் அது அணியை மிக மோசமாக பாதிக்கும். அணியில் பல இளம் வீரர்கள் உள்ளனர். இளம் வீரர்களை அறிமுகப்படுத்திவிட்டு அவர்கள் சிறப்பாக விளையாடாவிட்டால் அணியிலிருந்து நீக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக வீரர்கள் மத்தியில் குழப்பநிலை காணப்பட்டது. நானும் அணியிலிருந்து நீக்கப்படுவேனா என அவர்கள் அஞ்சுகின்றனர்.

இளம் வீரர்கள் இயல்பாகவே சுயநலம் மிக்க விதத்தில் விளையாடுகின்றனர். அணிக்கு எப்படி வெற்றியை தேடித்தருவது என அவர்கள் சிந்தித்து அதற்கேற்ப விளையாடுவதில்லை. இதற்காக அவர்களைக் குற்றம்சாட்ட முடியாது. – என்று மஹேல ஜயவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# வாலெட்டே கழக அணியின் அழைப்பை நிராகரித்த போல்ட்




உலகின் அதிவேக மனிதராக வர்ணிக்கப்படும் ஜமைக்காவின் உசைன் போல்ட், மோல்டா நாட்டைச் சேர்ந்த உதைபந்துக் கழக அணியின் அழைப்பை நிராகரித்துள்ளார்.

உலகின் புகழ் பூத்த ஓட்டப்பந்தய வீரரான போல்ட், தடகளப் போட்டிகளிலிருந்து ஓய்வுப் பெற்ற பின்னர், தனது சிறு வயது ஆசை விளையாட்டான உதைபந்துப் போட்டியில் விளையாட ஆர்வம் காட்டி வருகிறார்.

இதற்கமைய அவர் தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள, ஆஸ்திரேலியா ‘ஏ’ லீக் தொடரில் பங்கேற்கும் சென்ட்ரல் கோஸ்ட் மரைனர்ஸ் கழக அணியில் இணைந்தார்.

அவர், சமீபத்தில், மரைனர்ஸ் கழக அணிமோதிய நட்பு ரீதியான உதைபந்துப் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்தார். இதனால் மோல்டா நாட்டைச் சேர்ந்த வாலெட்டே கழக அணி, போல்டை இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்ய முன்வந்தது. இதை போல்ட் மறுத்துள்ளார்.

இது குறித்து போல்டின், முகாமையாளர் ரிக்கி சிம்ஸ் கூறுகையில், உசைன் போல்ட் உதைபந்து விளையாட்டில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இந்த நிலையில், இவருக்கு பல கழக அணிகளிலிருந்து அழைப்பு வருகிறது. ஆனால், மோல்டா நாட்டைச் சேர்ந்த கழக அணியில் இணைய போல்ட்டுக்கு விருப்பம் இல்லை எனக் கூறினார்.

வாலெட்டே கழக அணி தலைமை செயல் அதிகாரி ரான் மிலாக்கம்ப் கூறுகையில், ‘போல்ட்டின் உதைபந்து வாழ்க்கை சிறப்பமாக அமைய வாழ்த்துகிறோம். எங்கள் அணியில் போல்ட் இணைய வேண்டும் என்ற விருப்பம் எப்போதும் இருக்கும்’ என கூறினார்.

32 வயதான உசைன் போல்ட், ஒலிம்பிக்கில் தடகளப் போட்டிகளில் 8 தங்கம் வென்றுதற்போதும் விளையாட்டு உலகில் அசைக்க முடியாத உச்சத்தில் உள்ளார்.

# பாகிஸ்தான் அணியின் மிகப்பெரிய சாதனை!

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி பெற்றுக்கொண்ட வெற்றி சாதனை வெற்றியாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக பாகிஸ்தான் அணி, கடந்த 2014ஆம் ஆண்டு, அவுஸ்ரேலியா அணிக்கெதிராக 356 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெற்ற வெற்றியே சாதனை வெற்றியாகவே அமைந்திருந்தது.

அந்தச் சாதனையை பாகிஸ்தான் அணி, நேற்று முன் தினம் அபுதாபியில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முறியடித்தது. நேற்றுமுன்தினம் நடைபெற்று முடிந்த போட்டியில், பாகிஸ்தான் அணி 373 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதுதவிர, இரண்டாவது டெஸ்ட் போட்டியில், ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை வென்ற மொஹமட் அப்பாஸ், ஆஸ்ரேலியா அணிக்கெதிரான 100 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஆகக்குறைந்த 10.58 என்ற சராசரியில் விக்கெட் சாதனை நிகழ்த்தினார்.



## படைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, லெப். கேணல் கலன பிரியங்கார லங்கா மித்ர அமுனு புரேவை, உடனடியாகத் திருப்பி அழைக்குமாறு ஐ.நா பொதுச் செயலர் அன்ரனியோ குரெரெஸ், இலங்கை அரசிடம், கோரியுள்ளார் எனவும் அவர் கூறினார்.

அவரது மனித உரிமைப் பதிவுகள் பற்றிய அண்மைய தகவல்கள் ஆய்வு செய்யப்பட்ட பின்னர், ஐ.நா இந்த முடிவை எடுத்துள்ளது.

மாலியில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றுவதற்கு செல்ல முன்னர், இவரது மனித உரிமைப் பதிவுகள் ஐ.நாவினால் ஆய்வுக் குட்படுத்தப்பட்டன. அண்மையில் புதிதாகக் கிடைத்த தகவல்களின் விளைவாகவே ஐ.நா. இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த இராணுவத் தளபதி ஏற்கனவே நாடு திரும்பாவிடின், அவர் மிகவிரைவில் இலங்கைக் குத் திருப்பி அனுப்பப்படுவார்.

கூடிய விரைவில், லெப். கேணல் அமுனுபுரேவுக்குப் பதிலான அதிகாரியை நியமிக்குமாறு இலங்கையிடம் ஐ.நா கேட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியில், 200 பேர் கொண்ட இலங்கை இராணுவ அணி யொன்று ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றி வருகிறது.

எனினும், லெப்.கேணல் அமுனுபுரே மீதான போர்க்குற்றச்சாட்டு தொடர்பான விவரங்கள் எதையும், ஐ.நா பேச்சாளர் வெளியிடவில்லை.

மாலியில் உள்ள– பெயர் வெளியிடப்படாத – இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் மீது, இறுதிக்கட்டப் போரில் போர்க்குற்றங்களை இழைத்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகக் கடந்த ஜூலை மாதம் 'தி கார்டியன்' நாளிதழ், செய்தி வெளியிட்டிருந்தது.

தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்ட யஸ்மின் சூகாவை தலைவராகக் கொண்ட அனைத்துலக உண்மை மற்றும் நீதி திட்டம், ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றும் இலங்கை படையினர் தொடர்பாக அந்த அறிக்கையில் தகவல்களை வெளியிட்டிருந்தது.

(ஐ)

## அடிப்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடுமையாகச் சாடியுள்ளார் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் 'சூழல் அரசியலும் நில அபகரிப்பும் யுத்தத்தின் பச்சை முகம்' உரை அரங்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். (அவரது உரையின் முழுவடிவம் 3ஆம் பக்கத்தில்)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருப்பி அழைக்குமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து –

ஐக்கிய நாடுகள் அமைப்பு குற்றம் சுமத்தும் இராணுவ லெப்.கேணல் கலன அமுனுபுர மிக அண்மையில் ஐ.நா அமைதிப்படையில் இணைந்து கொண்டவர். ஐக்கிய நாடுகள் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய லெப். கேணல் இலங்கைக்கு வரவழைக்கப்படுள்ளார். அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்ட பின்னர் மீண்டும் ஐ.நா அமைதிப்படையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார். (ஐ)

# மூளாய் இந்து இளைஞர் மன்ற பவள விழா நிகழ்வு இன்று

### கலை நிகழ்வுகளுடன் சிறப்பு பட்டிமன்றமும்

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் 75 ஆம் ஆண்டு நிறைவு பவள விழா, இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மூளாய், பிரசாத் அரங்கில், மறைத்தலைவர் சி.யனார்த்தனன் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரனும், கௌரவ விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளரும் மன்றத்தின் முன்னாள் உறுப்பினருமான ச. கிருஷ்னேந்திரனும் கலந்து கொள்வர்.

தொடர்ந்து பவள விழா சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறும். வெளியீட்டுரையை ஆசுகவி செ. சிவசுப்பிரமணியமும் மதிப்பீட்டுரையை பேராசிரியர் க.தேவ ராஜாவும் ஆற்றுவர். முதற் பிரதியை ஈகையர் திலகம் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக்கொள்வர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் நடைபெற்று சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறும். அதன் தலைப்பு "இன்றைய இளைஞர்களுக்கு பெரிதும் தேவைப்படுவது வேகமா? விவேகமா?" என்பதாகும். தே.கர்ஷன், இ.சசீபன் மற்றும் இ.சர்வேஸ்வரன், ந. ஐங்கரன் ஆகியோர் வாதிடுவர். நடுவராக செந்தமிழ்ச் சொல்லருவி க.லலீசன் பணியாற்றுவார்.

# பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்கும் ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ள வரவு–செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அரசு வழமை போல் இம்முறையும் போலி வரவு–செலவுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்க உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியுள்ளார்.

அதேவேளை, இம்முறை வரவு–செலவுத் திட்டத்தில் மக்களுக்கு அரசு பல சலுகைகளை வழங்க உள்ளதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர எம்பிலிப்பிட்டியவில் நடந்த வைபவம் ஒன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எம் இதயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துப் பேசினார்.

மூன்று நாள்கள் பயணமாக இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஹைதராபாத் இல்லத்தில் இந்தியப் பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார்.

ஹைதராபாத் இல்லத்துக்குச் சென்று இறங்கியரணில் விக்கிரமசிங்கவை வரவேற்ற மோடி, எங்கள் இதயத்தில் இலங்கைக்கு என்றுமே ஒரு சிறப்பான இடம் இருக்கும் என்று கூறினார்.

இருநாட்டு நல்லுறவு மற்றும் இலங்கையில் இந்தியாவின் சார்பில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது இருநாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்தினர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஐ)

## அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும், பொருளாதாரத்தை முன்னேற்றுவதாகவும் கூறியே ஆட்சிக்கு வந்திருந்தது.

ஆனால் இந்த அரசு ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில் தொடர்ச்சியாக மக்கள் மத்தியில் வரிச் சுமையும் விலையேற்றமுமே கொண்டுவரப் பட்டுள்ளன. தமது இருப்பைத் தக்கவைப்பதற்காக மக்களை வதைக்கும் அரசாகவே இந்த அரசு உள்ளது.

குறிப்பாக கடந்த சில மாதங்களில் மூன்று தடவைகள் எரிபொருள் விலை அதிகரிக்கப் பட்டுள்ளது. இரண்டு தடவைகள் பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏனைய சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. எனவே இதற்கு எதிராக உண்மையான மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பில் மாபெரும் மக்கள் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம். அதற்கு வட பகுதி மக்களும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்– என்றார். (ஐ-07)

## றோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி தொடர்பான வதந்திகள் பரவுவதற்கு இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளே காரணமாகயிருக்கலாம். இந்தியாவுக்கும் இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களிற்கும் இடையில் உள்ள நல்லுறவைக் குழப்பும் முயற்சியாகவே இது இடம் பெற்றிருக்கலாம். இரு அரசுகளுக்கும் இடையிலான உறவு எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகின்றது என்பதே மஹிந்தவின் மீள் வருகையைச் சாத்தியமாக்கும்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் மூலம் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, சிறிசேன – றோ குற்றச்சாட்டு தொடர்பான வதந்தியைப் பரப்பியிருக்கலாம் என இலங்கை அரச வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கை – இந்தியாவுக்கு இடையில் நல்லுறவை விரும்பாத சக்திகளிமிருந்தே இந்த வதந்தி உருவாகியிருக்கலாம் என ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைப் பிரதமர் இந்தியப் பிரதமரையும் பாதுகாப்பு வட்டாரங்களைச் சேர்ந்தவர்களையும் சந்திக்கும்போது இந்த விடயம் பிரதானமாக ஆராயப்படும். இந்தியாவுக்கு இலங்கைப் பிரதமர் விஜயம் மேற்கொள்ளும் போது இந்திய பாதுகாப்பு வட்டாரங்களைச் சந்திப்பார் என முதலில் திட்டமிடப்பட்டிருக்கவில்லை. எனினும் 'றோ' குறித்த குற்றச்சாட்டுகளுக்குப் பின்னர் அவர் இந்தியப் பாதுகாப்பு வட்டாரங்களையும் அவர் சந்திப்பார் என தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று 'எகனமிக்ஸ் ரைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

## இன்றைய...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் எங்கள் கட்சித் தலைவராகிய எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்த வருட இறுதிக்கு முன்னர் அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதாக கூறியுள்ளீர்கள். அரசியல் தீர்வின் பின் பொருளாதார மேம்பாடு பற்றி ஆராயலாம். தயவு செய்து அரசியல் தீர்வை நாம் பெற உதவி செய்யுங்கள். என்னால் உங்கள் செயலணிக் கூட்டத்திற்கு வர முடியாததையிட்டு மனவருத்தம் அடைகின்றேன் என்று கூறி முதல் கூட்டத்தைப் பகிஷ்கரித்தேன்.

உடனே ஜனாதிபதி எமது நாடாளுமன்றப் பிரதிநிதிகள் 16 பேரையும் தமது இரண்டாவது கூட்டத்திற்கு அழைத்தார். அப்போது நான் கௌரவ சம்பந்தன் அவர்களுக்கு நடந்ததை விவரித்து எமது பிரதிநிதிகள் இக் கூட்டத்திற்குப் போகாது வருட முடிவின் முன் அரசியல் தீர்வைத் தாருங்கள் என்று நெருக்கடி கொடுக்க இதுவே தருணம் என்றேன். அவர் அவர்களின் கூட்டத்தைக் கூட்டி இந்த செயலணிக் கூட்டத்திற்கு நாம் சென்றேயாக வேண்டும், அரசியல் தீர்வும் பொருளாதார முன்னேற்றமும் சமாந்தரமாக நடைபெற வேண்டும் என்று கூறி எமவர் அடுத்த கூட்டத்திற்கு ஆஜரானார்கள். நெருக்குதல்களைக் கொடுக்காது தொடர்ந்து வரும் அரசாங்கங்களிடம் இருந்து அரசியல் தீர்வை எவ்வாறு பெறப் போகின்றோம் என்ற அடிப்படை அறிவுகூட இல்லாத தமிழ்த் தலைமைகளைத்தான் நாம் இன்று கொண்டுள்ளோம். கடைசியில் தீர்வு எதுவும் கிட்டாது. பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள முதலீட்டாளர்களை வடக்குக்கு கொண்டு வருவதாகவே இது முடியும். அடுத்த கிழமை முதல் ஆளுநர் பொறுப்பேற்ற பின் அவருடன் இணைந்து அடுத்த மார்ச் மாதத்தில் இலங்கை அரசாங்கம் மீண்டும் இரண்டு வருடங்கள் நீடிப்புப் பெற சகல நடவடிக்கைகளையும் எடுக்க இருக்கின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான் கூறுவார் அரசியலில் தோசையை எப்போது திருப்ப வேண்டும் என்று தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்று. தோசையே போடத் தெரியாதவர்கள் தான் எமது பிரதிநிதிகளாக இருக்கின்றார்கள்.

நீண்டகால யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை அழித்து பெறமுடியாத வெற்றிகளை, இன்று அரசு இரத்தம் சிந்தாமல், சந்தடிகள் எதுவுமின்றி, இவ்வாறான திணைக்களங்களின் உதவிகளுடன் முன்னெடுக்கிறது. அதற்கு அரசின் முகவர்களாக விளங்கக்கூடிய எமது உயர் அதிகாரிகளும் உடந்தையாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் ஒருநாள் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். அந்தநாள் விரைவில் கிட்ட வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து எனது உரையை இந்த அளவில் நிறைவு செய்கின்றேன்.

# யாழ். இந்துவில் ஸ்ரீஞானலிங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எழுந்தருளவிருக்கும் ஸ்ரீ ஞானலிங்கப் பெருமானின் ஆவர்த்தன கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9.05மணிமுதல்நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை3மணிமுதல்எண்ணெய்க் காப்பு வைத்தல் இடம்பெறும்.

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

காங்கேசன்துறை, ஒக்.21

ஆதிமயிலிட்டி ஸ்ரீ காசிப் புதுவாய்தேவஸ்தானபாலஸ்தாபன கும்பாபிஷேகம், நாளை திங்கட்கழமை பகல் 12 மணி முதல் 1.51 மணி வரை சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறும்.

இன்று ஞாயிறு மாலை 4 மணிக்குகணபதிபூஜை,ஹோமம், வாஸ்து சாந்தியும் நடைபெறும்.

கடந்த கால சூழ்நிலையால் சேதமடைந்திருந்த தேவஸ்தானத்தின் கட்டடத் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ

## ஒதியமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி உதவியில் அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று நடைபெறுவதாக இருந்தது.

இதனை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் அடிக்கல் நாட்டும் நிகழ்வுக்குத் தடை விதித்துள்ளனர்.

இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, நினைவுத்தூபி அமைப்பதற்கான சகல அனுமதிகளையும் பொலிஸாருக்குக் காண்பித்துவிட்டு அதனை அமைக்கலாம் என்று பொது அமைப்புக்களுக்கு அறிவித்துள்ளதாகக் கூறினார். (ஐ)

## இனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஒட்டுச்சுட்டானில் நேற்று'நில அதிகாரமும் அதிகாரப்பகிர்வும்' என்ற தலைப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் – தமிழரின் அரசியல் உரிமைகளுக்கு நில அதிகாரம் அடிப்படையானது. இதனால் தான் பண்டா–செல்வா, மற்றும் டட்லி–செல்வா ஒப்பந்தங்கள் நில அதிகாரங்களை பகிர்வதற்கு முக்கியத்துவம் அளித்தன.

1957 இலிருந்து 1987 வரைக்கும் இருந்த அனைத்து ஒப்பந்தங்களும், அதற்குப் பின்னரும், நில அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என ஒப்புக்கொண்டன. ஆனால் இன்றுவரை இது நடக்கவில்லை.

இதனால் இனப்பரம்பல் மாற்றம் 70 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து கொண்டே சென்றது. பேச்சு ஒப்பந்தங்கள் மூலம் இதைத் தடுக்க முடியாமல், கடைசியில் ஆயுதம் ஏந்தி, அதுவும் தோல்வியடைந்தது.

தற்போது முன்வைத்துள்ள திட்டமும் மேற்கூறிய நில அதிகாரப் பகிர்வு கொள்கைகளை அங்கீகரிக்கின்றது. இது நிறைவேற நாம் சகல முயற்சிகளையும் எடுக்க வேண்டும் – என்றார்.(ஐ)

# முல்லைத்தீவில் அபிவிருத்திக்கு முன் இருப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்



## சாந்தி எம்.பி. கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி அபகரிப்பு என்பதே பாரிய பிரச்சினையாக உள்ளது. அபிவிருத்திக்கு முதல் எமது இருப்புக்கள் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

– இவ்வாறு கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழிகாட்டலில் இலங்கை தமிழரசுக் கட்சியின் திட்டமிடலில் இடம்பெறும் 'நில அதிகாரமும் அதிகாரப்பகிர்வும்' சிறப்புப் பேருரை நிகழ்வு நேற்று மாலை ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வளாகத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன விடுதலைக்காக நாம் தொடர்ந்து பாடுபட்டு, பல இன்னுயிர்களைத் தியாகம் செய்து ஆயுதப் போராட்டம் தோற்று இன்று அகிம்சா வழியில் போராடிக் கொண்டிருக்கிறோம்.

புதிய அரசமைப்பு குறித்து தென்பகுதியில் ஒருவிதமான பிரசாரம். வடபகுதியிலே இன்னொருவிதமான பிரசாரம்.

பிரபாகரனின் ஆசை நிறைவேறுகிறது, தமிழீழம் மலரப்போகிறது என்று மஹிந்த அணியினர் தென்பகுதியில் பிரசாரம் செய்கின்றனர்.

இந்த யாப்பில் எதுவுமில்லை என்பது வடக்கில் இன்னொரு தரப்பினரது பிரசாரம். அதில் என்ன இருக்கிறது என்று ஊடகவியலாளர்கள் கேட்டால் நான் இன்னும் அதை வாசிக்கவில்லை என்று இன்னும் சில தலைமைகள் பிரசாரம்.

இந்த அரசமைப்புக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் வடக்கு, கிழக்கில் தெளிவாக விளக்கமளித்து வருகிறார்.

தமிழ் மக்களுக்கான ஒரு சிறந்த தீர்வை விரும்பாத சிலர் இதை குழப்பும் விதமாக பல பிரசாரங்களைச் செய்கின்றார்கள்–என்றார். (ஐ)




2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி கொக்குவில், குளப்பிட்டிப் பகுதியில் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சுலக்சன் மற்றும் கஜன் ஆகியோரின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் மாணவர்கள் பங்கேற்று உயிரிழந்த சக மாணவர்களின் உருவப்படத்துக்கு விளக்கேற்றி அஞ்சலி செய்தனர். (ஐ–07)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அரசமைப்புக்கு முரணானதா?

## உயர்நீதிமன்றம் விரைவில் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

நாடாளுமன்றத்தில் அரசு சமர்ப்பித்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என்று உத்தரவிடக் கோரி, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தொடர்பாக சட்ட மா அதிபரின் நிலைப்பாடு நாளை திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் எழுத்தில் சமர்ப்பிக்கப்பவுள்ளது.

அந்த மனு நாளை திங்கட்கிழமை உயர்நீதிமன்றத்தில் அழைக்கப்பட உள்ளதுடன், சட்ட மா அதிபர் சார்பில் சார்பில் மேலதிக சொலிசிஸ்டர் ஜெனரல் யசந்த கோதாகொட ஆஜராக உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஏழு தரப்பினர் இந்தச் சட்டமூலத்துக்கு சவாலாக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளனர். அந்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானதா என்பது தொடர்பான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகருக்கு தெரிவிப்பதாக நேற்று முன்தினம் மாலை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஐ)

# 'றோ' மீது ஜனாதிபதி மைத்திரி குற்றம்சாட்டியமை உண்மையே

## தி ஹிந்து' ஆசிரியர் ராம் ஆணித்தரம்



புதுடில்லி, ஒக். 21

தம்மைக் கொலை செய்ய 'றோ' சதித் திட்டம் தீட்டியதாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார் எனத் தாம் வெளியிட்ட செய்தி உண்மையானதே என்று 'தி ஹிந்து' நாளிதழின், ஆசிரியர் என்.ராம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கீச்சகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் –

'தி ஹிந்து' உண்மையைச் சொல்லும், தனது பணியை செய்துள்ளது.

இந்த அறிக்கையை வெளியிட முன்னர், எமது இலங்கைச் செய்தியாளர் இந்தச் செய்தியை–தாம் அறிந்த தகவலை பல சுதந்திரமான வட்டாரங்களில் உறுதிப்படுத்தியிருந்தார்.'

அவர்கள் முட்டாள்தனமான மறுப்புகளை வெளியிடட்டும். ஆனால் நாங்கள் எமது செய்தியாளரின் உண்மை சரிபார்க்கப்பட்ட அறிக்கையின் பக்கம் நிற்கிறோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# புறக்கணிக்கப்பட்ட ஒரு தரப்பிடம் மீண்டும் அரசைக் கையளிக்கலாமா?

## அமைச்சர் சஜித் பிரேமதாஸ கேள்வி



கொழும்பு, ஒக். 21

மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு தரப்பினரிடம் மீண்டும் அரசைக் கையளிப்பதா என மக்கள் சிந்தித் துப்பார்க்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு – கொக்குவில் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது அந்தக் கட்சியின் முக்கியஸ்தரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களின் நலன்களைப் பேணும் ஓர் அரசை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த அரசு அரச பயங்கரவாதத்தைச் செயற்படுத்தியது. மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் புறந்தள்ளப்பட்டன.

அத்தகையவர்களை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வருவது குறித்து மக்கள் தெளிவுடன் செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.